FREE ISSUE

என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

# லண்டன் தமிழர் தகவல்

July 2014

London Tamil's Information



## நம்பிக்கை மெய்யாகுமா?

## நன்றி மறவா நடிப்புலக நாயகன்

மாதாந்திர செய்திச் சஞ்சிகை

A monthly information digest


லண்டனில் No1
நகை மாளிகை
Lakshmis
Jewellers
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை


Niru BRAND®
Bringing
Great
Food
to Life.
The No 1 Brand
Niru BRAND
Quality you can taste
Niru Europe Ltd,Unit11,Mitcham Industrial Estate, 85 Streatham Road,Mitcham,Surrey CR42AP.
T: 020 8640 8228 F: 020 8640 8423 E:sales@niru.co.uk W: www.niru.co.uk



# தமிழர் தகவல்
Tamil Information


பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல் - குறள்

திருவள்ளுவர் ஆண்டு 2045
நந்தன - ஆனி
மலர் : 12
இதழ் : 134
ஜீலை - 2014



முகவரி :
41, HADDINGTON ROAD
BROMLEY
KENT BR1 5RG, U.K.
Email : jothy5@yahoo.co.uk



வெளியீடு :
திருமுருகன் அறிவகம்
லண்டன்
Thirumurugan Arivagam
London

கணக்கு எண் : 29513668
வங்கி இலக்கம் : 77 91 29
வங்கி : Lloyds TSB

ஆசிரியர் : அரவிந்தன்
Editor : Aravindan

வடிவமைப்பு :
தமிழ்அலை
Layout :
Tamil Alai, tamilalai@gmail.com



படைப்புகள் யாவும்
ஆக்கியோரின் உரிமைகளே



4000 பிரதிகள்


தமிழர்களே! தமிழர்களுடன்
தமிழில் பேசுங்கள்!!

**ஆனி உத்தரத் தேர் திருவிழா**
ஜீலை மாதம் 4ஆம் திகதி
சிதம்பரத்தில் நடைபெறுகிறது.


தங்கம் என்று நினைத்ததும்
நினைவுக்கு வர வேண்டிய பெயர்
Tharani Jewellery
54 Ealing Road, Wembley
Middlesex HA0 4TQ
Tel : 020 8902 7111, 8902 6777




வாசகர்களே! எமது விளம்பரதாரர்களை மனமுவந்து ஆதரியுங்கள்!



லண்டனின் முதல் கோயில்
உயர்வாசல் குன்று முருகன்
கோயில்.
இந்த கோயிலின்
கொடியேற்ற விழா சமீபத்தில்
நடைபெற்றது.
அந்த காட்சிகள் தமிழர்
தகவல் வாசகர்களுக்காக






VAANI Foods
லண்டனில் அதிக அளவில்
பருப்பு வகைகள்
காய்கறி வகைகளை
இறக்குமதி செய்து
விற்பனை
செய்பவர்கள்
Natural and Premium Quality Products
தயாரிப்பாளரிடமிருந்து
நேரடியாக வாடிக்கையாளருக்கு
Natural and Premium Quality Products
VAANI Foods
020 8668 7648
www.vaanifoods.com


இது விளம்பரம்
அல்ல
ஒரு அறிவிப்பு
லூசியத்தில் இயங்கிவரும்
எமது கடைகளில் பிரதி மாதமும்
15ஆம் திகதிலிருந்து 30ஆம் திகதி வரை
50 பொருட்கள் மிக மிக மிக
மலிந்த விலையில் விற்பனையாகிறது.
இந்த வாய்ப்பை இப்பகுதி மக்கள்
பயன்படுத்திக்கொள்ளுமாறு அன்புடன்
கேட்டுக்கொள்கிறோம்.
BEST FOOD
LOMPIT HILL
LEWISHAM
LONDON SE13 5 NS
BEST FOOD
(KRS STORE)
33 LEE HIGH
LEWISHAM
LONDON SE13 5 NS

Ilford பகுதியில் புதிய பல்பொருள் அங்காடி


# SRI STORE

இது காலமும் SRI FOOD & WINE
என்ற பெயரில் இயங்கிய எமது கடை
புதிய பெயரில் தொடர்ந்து தங்கள் சேவைக்காக

**396-400 Ilford Lane Town Centre Ilford, IG1 2NB**
**Tel : 020 8553 7737**





# Need A Policy?



Our Protection plans offer excellent protection for your loved ones and for yourself.

**Accident Protection**
**Income Protection**
**Life Cover**
**Critical Illness**



**For more detailed information & one to one advice**
**Please contact – Mr. SUTHA Consultant**

**Tel: 0844 887 1664 Mob: 07947 471 529**
**E-mail: mahasutha@live.co.uk**




## குழந்தைகளின் குறும்புகளை ரசிக்கத் தூண்டும் எளிய கவிதைகள் நிறைந்த நூல்...

லண்டன் தமிழர் தகவல் இதழிலும் தமிழகத்து இலக்கிய இதழ்களிலும் கவிஞர் இசாக் எழுதி வெளியான குழந்தைகளைக் கொண்டாடும் கவிதைகளின் தொகுப்பு வண்ணப் படங்களுடன் வெளிவந்துவிட்டது.

தலை சாய்க்கவும்
அமைதியாக இருக்கவும்
நான் ஆயத்தமெனில்

மடி கொடுக்கவும்
தாலாட்டுப் பாடவும்
எப்போதும்
அணியமாக இருக்கிறான்
மகன்

◆◆

கோபித்துக் கொண்டதாகச் சொல்லி
அறைக்குள்
நுழைந்து கொண்ட
குழந்தை
எட்டி எட்டிப்
பார்த்து
புன்னகை பூக்கிறது

◆◆



தேவைக்கு
**தமிழர் தகவல்**
இதழைத் தொடர்புக் கொள்ளுங்கள்

# நம்பிக்கை மெய்யாகுமா...?

இந்தியாவில் ஆட்சி மாறினாலும், காட்சி மாறாது என்பது ஈழத்தமிழர் சிக்கலில் இன்றுவரை நிலவி வரும் போக்கு என்பதை அனைவருமே அறிவர். இந்நிலையில், புதிய பிரதமராகப் பதவியேற்றிருக்கும் திரு. நரேந்திரமோடி அவர்கள், தன்னுடைய பதவி ஏற்பு விழாவிற்கு, முன்னெப்போதும் இல்லாத வழக்கமாக, இலங்கை அதிபர் இராஜபக்சேயை அழைத்தது, ஈழத்தமிழர், தமிழகத் தமிழர் என ஒட்டுமொத்தத் தமிழர்கள் நடுவிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இருந்தபோதும், புதிய அரசுக்கு நம்முடைய வாழ்த்துகளைத் தெரிவிக்கிறோம்.

இருந்தபோதும், இந்தியாவின் அழுத்தமே, இலங்கை அரசிடமிருந்து தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத் தரும் என்ற நம்முடைய நம்பிக்கையை, நரேந்திரமோடி தலைமையிலான மத்திய அரசின் மீதும் நாம் கொண்டிருக்கிறோம். அதோடு, தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்கள், பிரதமரிடம் கொடுத்த கோரிக்கை மனுவில், தமிழக நலன்கள் மட்டுமின்றி, ஈழத்தமிழர்களின் நலன்களையும் குறிப்பிட்டிருக்கிறார் என்று வந்த செய்திகள் எம் நம்பிக்கையை உறுதிப்படுத்தும் விதத்தில் அமைந்திருக்கிறது.

தமிழக சட்டமன்றத்தில், ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக, இலங்கை மீது பொருளாதாரத் தடை விதித்தல் உள்ளிட்டப் பல்வேறு சிறப்புமிக்கத் தீர்மானங்களை நிறைவேற்றியவர் ஜெயலலிதா. அதோடு தாய்த் தமிழகம் என்றைக்கும் தன்னுடைய தொப்புள் கொடி உறவுகளான எங்களுக்குத் தோள்கொடுத்தே வந்துள்ளது. இந்த ஆதரவும், உணர்வும் இனி வரும் காலங்களிலும் தொடரும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் எள்ளளவும் இடமில்லை. எங்களின் நலனிலும், தமிழீழ விடுதலையிலும் தாய்த் தமிழகமும், அதன் ஆட்சியாளர்களும் கொண்டுள்ள அக்கறைக்கு நாங்கள் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

உலக நாடுகளைப் பொறுத்தவரை, ஈழச்சிக்கலில் உறவு நாடான இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதை மிக உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன. முந்தைய காங்கிரஸ் அரசாங்கத்தின் விரும்பத்தகாத முடிவுகளும், நிலைப்பாடுகளும் உலக அரங்கில், எங்களின் போராட்டத்திற்குப் பின்னடைவை ஏற்படுத்தின என்றாலும் அது மிகையாகாது. எனவே, சுயமரியாதை மிக்க எங்களின் தன்னுரிமையை மதித்து, உரிமைகளை நேர்மையாக வழங்கிட இலங்கை அரசை, திரு நரேந்திரமோடி தலைமையிலான இந்திய அரசு வலியுறுத்த வேண்டும்.

அந்த வகையில், இந்தியப் பிரதமரிடம் எங்களுக்கான கோரிக்கைகளை முன்வைத்த, தமிழக முதல்வர் ஜெயலலிதா அவர்களுக்கு எங்கள் மக்களின் சார்பாகத் தமிழர் தகவல் தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.



# தமிழர் தகவலுக்குப் பாராட்டு

கனம் ஆசிரியர் அவர்களுக்கு

லண்டன் தமிழர் தகவல் மாதாந்த சஞ்சிகை தனது 11வது ஆண்டில் காலடி வைப்பதை காலங்கடந்தாலும், வாழ்த்தி மகிழ்கின்றேன். தமிழர் தகவலை வாசித்து மகிழும்போதெல்லாம் ஆசிரியரின் வேண்டுகோளையும் வேதனை சோதனைகளையும் உணர்ந்து என் மனதிற்குள் ஒரு எண்ணம் வந்துபோவதுண்டு. காய்க்கிற மரத்திற்குள் ஒரு கல்லடி விழும் என்று கூறுவார்கள் என்பதுதான் அந்த எண்ணம். நான் உண்டு – என் வேலை உண்டு என்ற சுயநலத்தோடு வாழ்ந்து வரும் நம்மவர் மத்தியில் குறிப்பாக புலம்பெயர் மக்கள் மத்தியில் தன் சமயத்தையும் தமிழையும் உலகெங்கும் மேலோங்கச் செய்ய வேண்டும் என்ற பேரவாவுடன் லண்டன் தமிழர்தகவல் ஆசிரியர் செய்யும் பெரும்பணி மேலும் பல வருடங்கள் தொடரவேண்டும் என்பதே என் அவாவும் இறைவனையும் வேண்டுகிறேன் அதற்காக.

தமிழர் தகவல் ஆசிரியர் அவர்களே! நீங்கள் ஆயிரத்தில் ஒருவன் தம்மால் தன்னால் செய்ய முடியாத ஒரு காரியத்தை இன்னொருவர் செய்து முடிக்கிறார் என்றால் அன்னாரின் ஆற்றலையும் அவரின் அப்பொதுப்பணியையும் ஆகக்குறைந்தது வாழ்த்துவதிலாவது நல்ல உள்ளம் படைத்த பெரியோர்களுக்கு மாற்றுக்கருத்தேதும் இருக்கமுடியாது என்பதே என் விளக்கம். தமிழினத்திற்கு இறைவன் கொடுத்த வரம் நீங்கள் என்பதை–புரிந்துகொள்ளும் சக்தியுடையோர் மட்டுமே புரிவார்கள் என்பதையும் இங்கு தாழ்மையுடன் தெரியப்படுத்துகின்றேன்.

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப்பெறின்"

என்ற வள்ளுவனின் வாக்கில் உங்கள் விடாமுயற்சியையும் – உறுதியையும் காண்கின்றேன். சுவாமி விவேகானந்தர் கூறியிருந்தார் "I shall consider myself blessed if i am able to burn like a candle and give a bit of light of service to the public" என்று அந்த வகையில் உங்கள் பணிக்கு இறைவனின் அங்கீகாரம் உண்டு.

வருமானம் தரும் ஏர்லங்கா விமானம் மூலம் பயணம் செய்வது போன்ற சில காரியங்களை தவிர்த்துவரும்படியும் தமிழர்களுக்கு வேண்டுகோள்கள் விடுத்துள்ளதை தமிழரில் பெரும்பாலோனோர் அனுசரிப்பார்களா? என்பதில் எனக்கு சந்தேகம்தான். இன்று மக்களை இரண்டு வகையினராக நோக்கலாம். உலக வாழ்க்கையை அனுபவிக்கவேண்டும் என்று சிந்திப்போரை ஒரு வகையினராகவும், கோவில் – சமயம் – சம்பரதாயம் என்று வாழ்வோரை இன்னொரு வகையினராகவும் நோக்கும்போது, பெரும்பான்மையோர் உலக வாழ்க்கையை அனுவிக்கவேண்டும் என்பதிலேயே சுயநல போக்குடன் இருப்பதால் பொதுநலம் சம்பந்தப்பட்ட வேண்டுகோள்கள் எந்தளவுக்கு இவர்களிடம் எடுபடும் என்பதில் எனக்குள்ள சந்தேகத்தையே மேலே குறிப்பிட்டிருந்தேன். எப்படியோ கூற வேண்டிய ஒரு விடயத்தை நீங்கள் கூறியுள்ளீர்கள் என்பதில் எனக்கும் மகிழ்ச்சிதான்.

"நினைத்ததை சொல்பவன் செய்பவன் சிறந்த மனிதன்" என்பதை அறிஞனொருவர் கூறியுள்ளது ஞாபகம் வருகிறது. அந்த வகையிலும் நீங்கள் சிறந்த மனிதரில் ஒருவர். உங்கள் "லண்டன் தமிழர் தகவல்" பணி தொடரட்டும்.

**என்.வி.நாதன்**

லண்டன்



# யார் முழு முதற் கடவுள்?


ஒவ்வொரு சமயத்திற்கும் முழு முதற் கடவுள் ஒன்று உண்டு. அந்தப்படி, நம்முடைய மரபுவழி சமயமாம், சைவத்திற்கு யார் முழுமுதற் கடவுள் என்பதை நாம் அனைவருமே நன்கறிவோம். அடியும், முடியும் காண முடியாத சிவபெருமானே நம் முதற் கடவுள். முழு முதற் கடவுள் என்று சொல்லுவதன் பொருள் என்ன தெரியுமா? அனைத்தும் அவர் வழிகாட்டலில், அவரை முன்னிறுத்தியே நடைபெற வேண்டும், அவருக்குப் பிறகுதான் மற்ற அனைத்துக் கடவுளர்களும் வைக்கப்பட வேண்டும். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தொடக்கமும் முடிவும் அவரே என்பதுதான்.

ஆனால், சைவர்களாகிய நம்முடைய சமய வழிபாட்டு நெறிமுறைகள் இன்று எந்நிலையில் இருக்கின்றன என்பதைப் பார்க்கும்போது, வேதனைதான் மிஞ்சுகிறது. சிவ வழிபாடு கொஞ்சம் கொஞ்சமாகப் பின்னுக்குத் தள்ளப்பட்டு வருகிறது. விநாயகர் பெரும்பான்மையாக முன்னிறுத்தப்படுகிறார். அதேபோல, அம்மன் வழிபாடும் நம்மிடையே முக்கியத்துவம் பெற்று வருவதைப் பார்க்க முடிகிறது. லண்டனில், பெரிய பெரிய அம்மன் கோயில்களும், விநாயகர் கோயில்களும் தோன்றியிருப்பது, சைவ வழிபாட்டு நெறிகளை விநோதமானவையாக மற்றவர்கள் புரிந்துகொள்ள வழி ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தின் முதன்மை புரியாமல் நடந்துகொள்வதைப் பார்க்கும் போது வேதனையாக இருக்கிறது. சைவத்தைப் பொறுத்தவரை, சிவன் – பார்வதி, முருகன் அதற்குப் பிறகுதான் மற்ற கடவுளர்கள் எல்லாம். பிரதோஷத்தன்று, சிவன் கோயிலில் சிவனுக்கும், நந்திக்கும் சிறப்பு பூசைகள் செய்யப்படும். அன்றைய தினம், முப்பத்து முக்கோடி தேவர்களும் சிவன் கோயிலில் கூடியிருப்பர் என்பது நம்பிக்கை. ஆனால், பலரும் பிரதோஷத்தன்று பக்கத்தில் உள்ளது எந்தக் கோயிலாக இருந்தாலும் போய்விடுகின்றனர். முறைகளைப் பார்ப்பதில்லை, தங்கள் வசதியை மட்டுமே பார்க்கின்றனர்.

இங்கிருந்து தமிழ்நாட்டுக்குப் போகின்றவர்களும், திருச்செந்தூருக்கும், சிதம்பரத்திற்கும்தான் முதலில் போக வேண்டும். ஆனால் அவர்கள் அப்படிச் செய்வதில்லை. சைவத்தில் திளைத்து வளர்ந்தவர்கள் நாம். நாமே சைவ முறைகளை மாற்றுவது நியாயமா என்பதைச் சற்று சிந்தித்துப்பார்க்க வேண்டும்.

பூ. இரா. இராஜதாயன்பன்



# நன்றி மறவா நடிப்புலக நாயகன்

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்புத் திறமை குறித்தும் அவர் நடித்த திரைப்படங்கள் குறித்தும் பலருக்குத் தெரியும். அவருடைய அரசியல் ஈடுபாடும் பலர் அறிந்ததே. ஆனால், அவருடைய தனி மனித வாழ்க்கை குறித்து அறிந்தவர்கள் வெகு சிலரே !சிவாஜி கணேசன் தென்னிந்தியாவின் மிகவும் பிரபலமான பெரிய நடிகராகவும், அரசியல்வாதியாகவும் விளங்கியவர். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி எனப் பல மொழிகளில் முன்னூறுக்கும் மேற்பட்ட திரைப்படங்களில் நடித்துள்ளவர்.

*1927*, அக்டோபர் *1* இல் சின்னையா மன்றாயருக்கும், ராஜாமணி அம்மாளுக்கும் மகனாக விழுப்புரத்தில் பிறந்த இவரின் இயற்பெயர் விழுப்புரம் சின்னையாப்பிள்ளை கணேசன்.

தனது இளம்வயதிலேயே நாடகங்களால் பெரிதும் ஈர்க்கப்பட்டதாலும், அதில் பங்கேற்பதில் ஆர்வம் மிக அதிகமாக இருந்ததாலும், தனது கனவினை நிறைவேற்ற ஒன்பது வயதிலேயே வீட்டை விட்டு ஓடிவந்தார்.பின்னர், அவரது அம்மாவே நாடகக் குழுவில் இடம் பெற உதவி செய்தார்.சிவாஜி கணேசனின் மனைவி கமலாம்மாள். அவர்களுக்கு ராம்குமார், பிரபு என்ற மகன்களும், சாந்தி, தேன்மொழி என்ற மகள்களும் உள்ளனர்.

திரையுலகுக்கு வரும் முன், நாடகங்களில் நடித்த வி.சி. கணேசன், பேரறிஞர் அண்ணாவின் 'சிவாஜி கண்ட இந்து ராஜ்ஜியம்' என்ற நாடகம் மூலமாக மிகவும் பிரபலமானார். இதில் பேரரசர் சிவாஜியாக நடித்த அவரின், நடிப்புத் திறமையைத் தந்தைப் பெரியார் பெரிதும் பாராட்டினார். அப்போது பெரியார் அவரை 'சிவாஜி

கணேசன்' என்றழைத்தார்.இந்நிகழ்ச்சியே, அவருக்கு 'சிவாஜி கணேசன்' என்ற பெயரை நிலைக்கச் செய்தது.

தமிழ்த் திரையுலகில், கலைஞர் மு. கருணாநிதியின் கதை வசனத்தில் உருவான 'பராசக்தி' என்ற திரைப்படம் மூலமாக அறிமுகமான சிவாஜி கணேசனுக்கு, உணர்ச்சிப் பூர்வமான தமிழ் உச்சரிப்பும், நல்ல குரல்வளமும், சிறந்த நடிப்புத் திறனும் இருந்ததால், நடிப்புலகில் தனி சாம்ராஜ்யமே நடத்தியவர். 'நடிகர் திலகம்' என்றும், 'நடிப்புச் சக்கரவர்த்தி' என்றும் மக்களாலும், திரையுலகத்தினராலும் இன்றும் புகழப்படுகிறார்.

அக்காலத்தில், தேசத் தலைவர்களின் பாத்திரங்களை ஏற்றுத் திறம்பட நடித்த முதன்மையான நடிகர் என்ற பெருமை சிவாஜி கணேசனுக்கு உண்டு. 'இராஜராஜ சோழன்', 'கப்பலோட்டிய தமிழன்' ஆகிய திரைப்படங்கள் குறிப்பிடத் தக்கவை. 'மனோகரா', 'வீரபாண்டிய கட்டபொம்மன்' போன்ற திரைப்படங்கள், இவரின் வீர வசனத்திற்காகப் பெயர் பெற்றவை. 'பாசமலர்', 'வசந்த மாளிகை' போன்ற திரைப்படங்களில் இவரது உணர்ச்சிப்பூர்வமான நடிப்பைக் காணலாம். 'கந்தன் கருணை', 'திருவிளையாடல்', 'சரஸ்வதி சபதம்' போன்ற பக்தித் திரைப்படங்களும் பெரிதும் பேசப்பட்டவை.

அரசியலில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த சிவாஜி கணேசன் *1955* வரை தி.மு.க.வில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். *1961* முதல் காங்கிரஸ் கட்சியில் இணைந்து செயல்பட்டார்.*1982*இல் நாடாளுமன்றத்தின் மேலவை உறுப்பினரானார்.பின்னர், கட்சியில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக, *1987*இல் கட்சியை விட்டு விலகி, 'தமிழக முன்னேற்ற முன்னணி' என்ற புதிய கட்சியைத் தொடங்கினார்.பெரும்நடிகராக இருந்தாலும், அவருக்கு அரசியலில் செல்வாக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, தனது இறுதிக்காலத்தில் அரசியலிலிருந்து ஒதுங்கியிருந்தார்.





பல விருதுகளைப் பெற்று அவ்விருதுகளுக்கே பெருமை சேர்த்தவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன். *1960* இல் ஆப்பிரிக்க – ஆசியத் திரைப்பட விழாவில் சிறந்த நடிகருக்கான விருது கிடைத்தது. *1966* இல் பத்ம ஸ்ரீ விருது, *1984* இல் பத்ம பூஷன் விருது, *1995* இல் செவாலியே விருது (Chevalier), *1997* இல் தாதா சாகேப் பால்கே விருது எனப் பட்டியல் நீள்கிறது.

*1962* இல் சிறப்பு விருந்தினராக அமெரிக்க நாட்டில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட போது, நயாகரா மாநகரின் 'ஒரு நாள் நகரத் தந்தை' எனச் சிறப்பிக்கப்பட்டார்.

தென்னிந்திய திரைப்படத் துறையில், சிறந்த நடிகராக விளங்கிய சிவாஜி கணேசன் அவர்கள், சுவாசப் பிரச்சினை காரணமாக, சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, ஜூலை *21, 2001* ஆம் ஆண்டு தனது *74*வது வயதில் மரணமடைந்தார். பலரும் சிவாஜியிடம் கவனிக்காத விஷயம் அவரது ஸ்டைல். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் ஒரு பேட்டியில் 'நான் ஸ்டைல் மன்னன் என்றால் அவர் ஸ்டைல் சக்கரவர்த்தி. அவரது படங்களைப் பார்த்தே ஸ்டைல் பண்ணக் கற்றுக்கொண்டேன்' என்று சொன்னார். திருவளர்ச்செல்வரில் 'மன்னவன் வந்தானடி' பாடலின் ஆரம்பத்தில் அவர் நடக்கும் நடை அவரது ஸ்டைலுக்கு உதாரணம்.புதிய பறவை, வசந்த மாளிகையிலும் ஸ்டைலில் கலக்கியிருப்பார்.உத்தமபுத்திரன் படத்தில் யாரடி நீ மோகினி பாடலுக்கான காட்சியில் அவரது நடையையும் நடனமும் பலரை ஈர்த்தது.

பொதுவாகவே ஒரு துறையில் சிறந்து விளங்குவோர், வேறு யாரும் தன்னை விட நல்ல பெயர் எடுத்துவிடக்கூடாது என்பதில் குறியாக இருப்பர்.ஆனால் அதிலும் சிவாஜி வித்தியாசமானவராய் இருந்தார்.அவரை விட யாராவது நன்றாக நடித்தால் மனம் திறந்து பாராட்டுவதும், அவரை அமுக்க முயலாமல் ஊக்குவிப்பதும் அவர் வழக்கம். திருவிளையாடல் படப்பிடிப்பில் நாகேசின் காட்சிகள் படமாக்கப்பட்டபோது, 'நாகேசின் ஒரு வசனத்தைக்கூட கட் செய்யக்கூடாது' என்று இயக்குனரிடம் சொன்னவர் சிவாஜி. இன்றளவும் நாகேசின் பெயர் சொல்லும் படமாக திருவிளையாடல் திகழ்கிறது.

சாதனையாளர்கள் பலரும் தவறி விழுவது பிள்ளைப் பாசத்தால்தான். ஆனால் அதிலும் சிவாஜி நடிப்பின் மீது அவருக்கிருந்த மரியாதையை நிரூபித்தார். தனது கலையுலக வாரிசாக கமலஹாசனையே அவர் அறிவித்தார்.தன் மகன் என்பதற்காக அவர் பிரபுவை தன் வாரிசாக மக்களிடம் திணிக்கவில்லை.

பிரபு ஒரு சமயம் 'நான் எப்படி நடிக்கின்றேன்?" என்று கேட்டபோது "முதல்ல நீ தமிழை ஒழுங்காப் பேசு.அப்புறமா நடிக்கிறதைப் பத்திப் பார்க்கலாம்" என்று சொன்னவர் அவர்.திறமையின் அடிப்படையில் கமலையே வாரிசாக ஏற்றுக்கொண்டார். அவரது நேர்மைக்குச் சான்றாகவும் அது அமைந்தது.தொழில் பக்தியிலும் அவரை மிஞ்ச ஆளில்லை. காலையில் 8 மணிக்கு படப்பிடிப்பு என்றால் 7 மணிக்கே வந்து ஒப்பனை செய்துகொண்டு உட்கார்ந்துவிடுவார்.அதே போன்று ஞாயிற்றுக்கிழமை குடும்பத்திற்கானது என்ற நடைமுறையை நடிகர்கள் மத்தியில் கொண்டு வந்தவரும் அவர்தான்.

வலது கை கொடுப்பது இடது கைக்குத் தெரியாமல் அள்ளிக் கொடுத்த கொடை வள்ளல் நடிகர் திலகம் என்பது பலருக்குத் தெரியாது. ஏனென்றால் அவர் தான் செய்த நற்பணிகளை விளம்பரப் படுத்திக் கொண்டதில்லை. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருமுறை கடுமையான வறட்சி நிலவியபோது, கண்மாய்களைச் சீரமைக்கவும், குடி தண்ணீர்க் குழாய்கள் அமைக்கவும் நேரடியாகச் சென்று லட்சக்கணக்கில் உதவி செய்ததை அன்றைய ஆளுநர் கே. கே. ஷா பாராட்டி வாழ்த்தியதை நாம் மறக்க முடியாது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களுக்குத் தமிழகம் முழுவதும் பல இடங்களில் சிலை வைத்த பெருமை இவருக்குத்தான் உண்டு.

தனது நேஷனல் பிக்சர்ஸ் பட நிறுவனம் மூலம் சிவாஜி கணேசனை திரையுலகுக்கு அறிமுகம் செய்தவர் பெருமாள் முதலியார். அவரது வீட்டுக்கு ஆண்டுதோறும் பொங்கல் திருநாளில் சிவாஜி கணேசன், அவரது மனைவி கமலா மற்றும் குழந்தைகளுடன் வந்து சீர்வரிசை அளித்து ஆசி பெற்றுச் செல்வது வழக்கம்.

சிவாஜி கணேசன் மறைவை அடுத்து அவரது மகன்கள் ராம்குமார், பிரபு ஆகியோர் தங்கள் குடும்பத்துடன் வேலூருக்குப் பொங்கல் அன்று வந்து சீர்வரிசை அளித்து ஆசி பெற்றுச் செல்கின்றனர்.

நன்றி மறவா பண்புக்கு இலக்கணமாக விளங்கியவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன். அந்தப் பண்பை தலைமறை தலைமுறையாகக் காப்பாற்றி வருகிறது அவருடைய குடும்பம்.

(நன்றி : தென்னரசு மாத இதழ்)

## வாசகர் மகுடம்

பதினொரு ஆண்டுகள் தவழ்ந்து பன்னிரெண்டாவது அகவையில் கால் பாதிக்கும் உங்கள் பதிப்புகள் போற்றத்தக்கவையே. உங்கள் புனிதமான பணி தொடரட்டும். உங்கள் ஆதங்கங்களை நன்கறிவேன். எம்மவர்களில் அநேகமானவர்கள் புலம் பெயர்ந்த நாடுகளில் தேவையற்றனவற்றிற்கு பொருளாதரத்தை விரையமாக்கிவிட்டு அதற்காக பெருமை கொள்பவர்களாக வாழ்கின்றனர். என் செய்வது காலம் கனிந்து வரும் உறுதியோடு உங்கள் பணி தொடரட்டும். திருச்செந்தூரானும் சிதம்பரத்தானும் உங்களுடன் தானே.

பன்னிரண்டாவது ஆண்டு தொடக்க இதழில் 'கல்வியின் வருங்காலம்', தமிழ் காப்போம் 'திருமுறைக்கு ஒரு விழா' மற்றவையோடு இவை மிகவும் கவர்ந்தன.

பாவலேறு பெருஞ்சித்தரனார் அவர்களுடன் ஓரிரு வாரங்கள் பழகும் வாய்ப்பு பெற்றவன் அவர் போன்றோர்கள் பற்றி தொடர்ந்து தமிழர் தகவல் வெளிக்கொணர்ந்து எம்மவர்களிடையே தமிழ் உணர்வை ஏற்படுத்த வேண்டுமென்ற ஆதங்கமாகவுள்ளேன்.

புதியவனாக குழந்தைகளை கொண்டாடும் கவிதைகளின் தொகுப்பு வரவிருப்பது இதழுக்கு உரம் சேர்க்கும் என்பதில் ஐயமில்லை.

அன்புடன்

தமிழர் தகவல் அன்பன்



# சைவ சமயம் எதிர்நோக்கும் அறை கூவல்களும் தீர்வுகளும்

சிவநெறிச்செல்வர்
**மனோகரன்**
தலைவர். உலக சைவப் பேரவை
பிரித்தானியக்கிளை

ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வமும், ஒன்று கண்டீர் உலகுக்கு உயிர் ஆவதும், நன்று கண்டீர் இனி நமச்சிவாயப் பழம், தின்று கண்டேற்கு அது சித்தித்தவாறே நமசிவாய, அன்பே சிவம், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்பது நமது திருமூல நாயனார் வழிவந்த சைவத்தின் தாரக மந்திரங்கள். நிறை மொழி மாந்திரங்கள். நிறை மொழி மாந்தர் ஆணையிர் கிளந்த மறை மொழி தானே மந்திரங்கள்.

நாம் வாழும் உலகம் சிவசக்தி மயமானது. இங்ஙனம் அமைந்துள்ள வாழ்க்கையில் "அவன் அருளாலே அவன் தாள் வணங்கும்" அரிய பேற்றினைப் பெற்றவர்கள் நமது சைவப் பெருமக்கள். இது உண்மை. வெறும் தற்புகழ்ச்சி அல்ல, என்பதை பன்னாட்டு வரலாற்று அறிஞர்களும் சமய தத்துவத்துறை ஆராய்ச்சி வல்லுநரும், ஏன் விஞ்ஞானிகளும் கூட இன்று ஒப்புக் கொள்வதை உணர்ந்து உலக சைவர்கள் பெருமைப்படவேண்டும். சமயம் என்பது இறைவனது அருளை எண்ணி அவனுக்கு நன்றி கூறுதை மையமாகக் கொண்டதொன்றாகும். பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் மிளிர்வது சைவ சமயத்தின் தனிச்சிறப்பு. கோயில் வழிபாட்டோடு சைவம் வளர்ந்திருந்தது. என்பதற்கு நாயன்மார்களின் வரலாறு சான்று பகிர்கின்றது. சைவம் நலிவுற்ற காலத்தில் இறையருளால் நாயன்மார்கள் பலர் அவதரித்து ஊர்கள் தோறும் சென்று ஆலய வழிபாட்டின் மூலமும் சைவத்தை நிலைப்படுத்தினர் என்பது யாவரும் அறிந்ததே.

நால்வர் பாடிய தேவார திருவாசகங்கள் பிற3 சமயங்களுக்குச் சென்ற அரசன் முதல் ஆண்டிவரை யானோரை மீண்டும் சைவ சமயத்திற்கு வரச் செய்தன. அரசனுக்கும் மக்களுக்கும் சைவசமயம் உண்மையான சமயம் என்பதை நாயன்மார்கள் பிற மத குருமாருடன் வாதம் செய்து பல சந்தர்பங்களில் மெய்ப்பித்தனர். உலகின் பல சமயங்கள் இருப்பினும் அவற்றின் அருளாளர்கள் யாரும் தம் இறைவனைக் கண்டதாக எச்சந்தர்ப்பத்திலும் கூறியதில்லை. எமது சைவ சமய அருளாளர்கள் பலர் கடவுளைக் கண்டதாக பல சந்தர்பங்களில் கூறியுள்ளார்கள். கருவறையில் ஓதவதற்குத் திருமுறைகள் ஏற்றவை என்பதற்கு சாட்சியாளர்கள் திருமுறைகளை ஓதிய நால்வர் பெருமக்களும் மற்றும் ஏனைய திருமுறை ஆசிரியர்களுமாவார்.

வடமொழி வேதத்தில் இருக்கும், யசூர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கிலும் எந்த இடத்திலும் இறைவனை முழுமுதற் கடவுளை, குறப்பாக சிவபெருமானைப் பற்றி பேச்சே இல்லை. சிறு தெய்வங்களையே பாடித்துதிக்கும்

வடமொழி வேதங்கள் கடவுளைக் கண்டேன் என்று எங்கும் சொன்னதாக இல்லை. ஆனால் தமிழ் வேதமான திருமுறைகளோ முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானைக் கண்டேன், கண்டேன் என்று களிதுளும்பப் பாடுகின்றனர். நால்வர் பெருமக்களின் வாக்கான திருமுறைகளில் இதனைக் காண்போம்.

ஞானசம்பந்தக் குழந்தை ஞானப்பால் உண்டு இதோ சிவபெருமான் என்று "மெம்மான் இவன் அன்றே" என்று சுட்டிக்காட்டியது. இந்தக்குழந்தை சிவபெருமானை தான் கண்டதும் அல்லாமல் பிறருக்கும் காட்டியது. இறைவனைக் கண்டு காட்டிய பெருமை சம்மந்தரையே சாரும். சாதாரண மக்களுக்கு மட்டும் அல்லாமல் பக்குவம் பெற்ற அடியாரான நாவுக்கரசு பெருமானுக்கு திருவாரூரில் இறைவனைக் கண்டு காட்டியது இக்குழந்தை.

நாவுக்கரசு பெருமான் "தேடித் தேடொனாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்" என்று இறைவனைத் தாம் கண்டதாகக் கூறினார். "கற்பனை கற்பித்த உடவுளை அடியேன் கழுமலவள நகர் கண்டு கொண்டேன்" என்று இறைவனைத் தாம் கண்டதாகச் சுந்தரரும் பாடுகின்றார்.

"ஒளிக்கும் சோரனைக் கண்டனும்" என்று புவனியில் புவனியில் சேவடி தீண்டினான் காண்க, சிவனெனயானும் தேறினன் காண்க" என்றும் இறைவனைத் தாம் பீரத்தியட்சமாகக் கண்டதாக மணிக்கவாசகர் கூறுகின்றார்.

**கருவறையில் திருமறை**

வடமொழி வேதத்தில் சிவபெருமானைப் பற்றிய பேச்சே இல்லை. அவை சிவபெருமானைக் கண்டதாக எங்கும் கூறவில்லை. ஆனால் தமிழ் வேதமான திருமுறைகளோ இறைவனை சிவபெருமானை கண்டதாகக் களிதுளும்பக் கூத்தாடிப்பாடுகிறது. எனவே சைவத் திருக்கோயில் கருவறையில் ஓதுவதற்கும் வழிபாட்டிற்கும் ஏற்றதும் திருமுறைகளே என்பது பிரத்யட்ச வகையால் காண்டல் என்னும் பிரமாணத்தால் சாதிக்கப்பட்ட உண்மையாகிறது.

இறைவனைக் காணவேண்டுமானால் உள்ளம் உருக வேண்டும். உள்ள உருக்கம் வடமொழிவேதம் ஓதுவார்க்கே வருவதில்லை. ஆனால் திருமுறைகளில் ஒன்றான திருவாசகம் ஓதினால் அதை ஓதுவாரும் அன்றிக் கேட்கும் கல்லும் கரைகிறது. எனவே இதுவே சிறந்தது என்று துறைமங்கலம் சிவப்பிரகாசர் கூறுவதும் பிரதயட்சம் என்னும் காண்டல் வகைச் சான்று.

வடமொழி பூசைகள் முடிந்தபின் கூறப்படும் வசனம் ஒன்று உள்ளது. அதாவது" சிவபெருமானுக்கு ப்ரீதியான திராவிட சுலோகங்களைப்பாடுக என்பதே. அதுவரை வடமொழியில் ஆற்றிய சடங்குகளில் சிவபெருமானுக்கு அவ்வளவு ப்ரீதி இல்லை, திருப்தி மன நிறைவு இல்லை என்பது உண்மையாகிறது. சடங்குகள் அத்தனையும் தமிழ் மறைகளால் செய்தால் சிவபெருமானது திருவுள்ளம் அதிக நிறைவடைந்திருக்கும். எனவே கோயில் கருவறையில் ஓதப்பட வேண்டியவை திருமுறைகளே.

"சொற்றமிழ் பாடுகென்றான் தூமறை பாடும் வாயான்" என்பது பெரியபுராணவாக்கு எனவே இறைவன் வாயில் இருந்து தூயமறைகள் வெளிவந்தன என்பது தமிழ் சித்தாந்தம் திருமுறைகளை ஓதி எலும்பு பெண்ணகியுள்ளது. நஞ்சு அமுதாகியுள்ளது. பாம்பு தீண்டி இறந்தவர்கள் உயிர் பெற்று எழுந்துள்ளனர். கொல்லவந்த யானை கும்பிட்டுச் சென்றது.

கல் கடலில் மிதந்தது. செங்கல் பொன்னாகிறது; திருவிழிமிழலையில் இறைவன் காசு கொடுத்துத் தமிழைக் கேட்டான். முதலை உண்ட பாலன் உயிர் பெற்றெழு, உண்ட முதலை கரையில் அப்பாலனை உமிழ்ந்தது. இன்னும் இதுபோன்ற அருளற்புதங்கள் பலவற்றை அடுக்கிக் கொண்டே போகலாம்.

> "தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
> உண்ட பாலனை அழைத்ததும் எலும்பு
> பெண்ணுருவாக
> கண்டதும் மறைக் கதவைத் திறந்தும் கன்னித்
> தண்டமிழ் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர்"

என்று பாடுவது பரஞ்சோதியார் திருவிளையாடற் புராணம். எனவே இத்தனை அருளற்புதங்களைச் சாதித்த திருமுறைகளே இறையருள் பெற்றுத் தரும் சாதனையை எளிதில் சாதிக்க வல்லது என்பது ஆறாம் அறிவாகிய பகுத்தறிவு ஒழுங்காக வேலை செய்யும் எவரும் அனுமானிக்க வல்லது மேலும் இதில் ஒன்று கூட சாதிக்க மாட்டாத வடமொழி வேதங்களைக் கருவறையில்

ஓதினால் ஒரு பயனும் இல்லை என்பதும் நன்கு விளங்கக் கிடக்கிறது.



"பாலனாம் விருத்தனாம் பசுபதிதானாம்" என வரும் பாடல் ஒன்றில் சம்பந்தர் தான் கூறியதெல்லாம் இறைவன் கூறியது என்ற பொருள்பட எனதுரை தனதுரையாக என்ற கூறுகிறார். ஒழுகலரிது எனத் தொடங்கும் இன்னொரு பாடலில் பழுதில் இறை எழுது மொழி தமிழ் விரகன் வழிமொழிகள் என்ற தமது மொழியெல்லாம் இறைவன் தன் மனதில் எழுத தாம் வழிமொழிந்தவை என்று கூறுகிறார். சம்பந்தரே தான் பாடியவையெல்லாம் தான் பாடியவையல்ல இறைவன் பாடியது என்று கூறுகிறார். அதற்கு மறுப்பு எது? இதை ஆப்த வாக்கியமாக ஏற்கிறோம். எனில் திருமுறைகள் இறைவனாகிய சிவபெருமானால் அருளப் பெற்றவை என்பது தெளிவாகிறது. இறைவன் அருளிய திருமுறைகளைக் கருவறையில் ஓதுவதுதானே சிறப்பு?

தில்லைக் கூத்தப்பெருமான் திருவிழா நெருங்கியது. திருவிழா தொடக்கத்துக்காகக் கொடியேற்றம் நடத்தும்போது கொடி மேலே ஏறாமல் தடைப்பட்டு நின்று விட்டது. தில்லை வாழ்ந்தனர்கள் எவ்வளவோ மந்திரங்கள் கூறியும் கொடி ஏறவில்லை. அப்போது தில்லை வாழ்ந்தனர்களின் வேண்டுகோக்காக இரக்கம் கொண்ட உமாபதி சிவசிவாச்சாரியார், திருவைந்தெழுத்து மந்திரத்தின் உட்பொருளாக திருவருளானையைச் செயல்படுத்துவதாக கொடிக்கவி என்றும் பதிகத்தை தமிழில் பாடினார். அந்நிலையில் கொடி ஏற்றுவாரின்றித்தானகவே ஏறியது.

பெத்தான் சாம்பான் உமாபதி சிவச்சாரியாருக்கு செய்து வந்து கொண்டு, அடைமழை காரணமாக விறகுக்கட்டை கொண்டு போய் வைக்க முடியவில்லை. தனது தொண்டிற்கு ஊறு விளைந்தே எனக் கவலையுற்று இறைவனை வேண்ட, இறைவன் தோன்றி "கவலற்க" எனக் கூறி "அடியார்க்கெளியன்" எனத் தொடங்கும் திருப்பாட்டு தமிழில் எழுதப்பட்ட ஓலை நறுக்கு ஒன்றை பெத்தான் சாம்பானிடம் கொடுத்து அதை உமாபதி சிவாச்சாரியாரிடம் கொண்டுபோய் கொடுக்குமாறு பணித்தார்.

திருச்சிற்றம்பலமுடையான் திருக்காரத்தால் எழுதப் பெற்ற பாடலைப் படித்து, இறைவன் திருவருளையும், பெத்தான் சாம்பானின் பக்குவப் பேற்றையும், அவனது திருத்தொண்டினது பெருமையையும் உணர்ந்து மகிழ்ந்தார். பெத்தான் சாம்பானுக்கு தீட்டை செய்து இப்பிறவியிலே அவனுக்கு சிவப்பேறு கிடைக்குமாறு செய்தார்.

தாழ்குலத்திலல் பிறந்த நந்தனாரின் வேண்டதலை ஏற்க இறைவன் அவர் கனவில் தோன்றி "இப்பிறவி போய் நீங்க ஏரியினிடை நீ மூழ்கி நம் கோயிலினுள் புகுக" எனப் பணிந்து, அவ்வாறே தில்லை வாழ்ந்தனர்கட்கும் நந்தனுக்கு ஏரி அமைத்துத்தரப் பணிந்து மறைந்தருளினார். இறைவன் இங்கு தமிழில் தான் உரையாடினார்.

அடியார் சேந்தனாரின் பக்தியை உலகிற்கு காட்ட, மார்கழி திருவாதிரை திருவிழாத்தேரை, மழைச் சேற்றில் தேரை அழுந்துமாறு செய்து "சேந்தா தேர் நடக்கப்ப பல்லாண்டு பாடுக" என இறைவன் கூற தேர் இழுக்கும் குழுவில் ஒருவராக நின்ற செந்தனார் "மன்னுக தில்லை வளர்க நம் பக்தர்கள்" எனத் தொடங்கும்

திப்பல்லாண்டை பாடிப் போற்றினார். தேர் வடம் பிடிக்காமலே ஓடி நிலையினை அடைந்தது.

சிவதீட்சை பெற்ற யாரும் கோயில் கருவறைகளில் திருமுறைகளைச் சிவச் சிந்தனை ஒன்றே உடைய தூயராய் அதன் வழி வழிபாட்டையும், வழிபாட்டுச் சடங்குகளையும் ஆற்றலாம். ஆற்றுவதே சிறப்பு ஆற்றவேண்டும் இங்கனம் அவனருளாலே அவன் தான் வணங்குவோமாக.

திருமுறையே சைவ நெறிக் கருவூலம் தென் தமிழின் தேன்பாகும், திருமுறையே கைலையின் கண் சிவபெருமான் செவிமடுத்த தமிழ் நல் வேதம். திருமுறையே நடராசன் கரம் வருந்த எழுதியருள் தெய்வ நூலாம் திருமுறையே சொக்கேசன் மதிமலிவாய் மலர்ந்தருளும சிறப்பிற்றாமல்.

கனியிருக்க காய்கவர்ந்தது போல எமது அருளாளர்களின் தேவார திருவாசக தாரக மந்திரங்கள் இருக்க வடமொழி மந்திரங்களை ஆலயங்களில் ஒலிப்பதால் பெரும்பான்மையான மக்கள் ஆலய வழிபாட்டினை வெறுக்கின்றனர். ஆலயத்திற்கு செல்லுகின்றோம் பூசை நடைபெறுகின்றது. ஐயர் வடமொழி மந்திரங்கள் கூறுகின்றார். ஒன்றும் விளங்கவில்லை இறுதியியில் விபூதி தருகிறார் வாங்கிப் பூசிக்கொண்டு வீடு திரும்புகின்றோம். இவை இன்றைய சைவ சமய மக்களின் மனத்தாக்கம். ஆலய வழிபாட்டை வெறுக்கும் கிலை. இவை மாறவேண்டும். ஆலயத்தில் நடைபெறும் பூசைகள் மக்களுக்கு விளங்கவேண்டும். பக்தர்களுக்கு இறைவனுக்கும் இடையில் வடமொழி விளங்காத மொழி கூறும் ஐயர். இது சைவத்தை வளர்க்குமா? இல்லை. இவை சைவ மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகள் இதில் நாம் கவனம் எடுக்காவிட்டால் ஆலய வழிபாட்டில் மக்களுக்கு விருப்பமில்லாமல் போக இடம் உண்டு. சைவசமய மக்கள் எதிர் நோக்கும் அறை கூவல்கள். இது தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இவ் அறை கூவலுக்கு தீர்வு முன் எடுத்துக் கூறப்பட்ட நாயன்மார்களின் பாக்கள் கருவறையில் ஓதப்படுதலேயாகும். இதை மக்கள் அடியார்கள் செவிமடுத்து மனதார உணர்ந்து இறைவனை மனமுருகி வழிபட வாய்ப்பு ஏற்படும். இத்தீர்வே சைவ மக்கள்களின் அறை கூவல்களுக்கு ஒரே மருந்தாகும் ஒரே தீர்வாகும், இதில் ஆலய நிர்வாகிகள் கவனம் எடுக்க வேண்டும். பக்தர்களின் குறை நிறைகளைக் கேட்க வேண்டும். மக்களின் இறை பக்தி ஓங்கி வளர, சைவ சமயம் தழைத் தோங்க, மக்களின் வரவு ஆலயத்தில் பெருக ஆலய நிர்வாகத்தினர் ஆவன செய்ய வேண்டும். இன்றைய ஆலய நிர்வாகிகள் தங்கள் நிர்வாககாலத்தில் சமய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தோம் என்ற மகிழ்ச்சி அடைய, சைவ சமயம் மக்கள் எதிர் நோக்கும் அறை கூவல்களை மனதிற்க கொண்டு ஆவன செய்வாங்கள் என மனதார நம்புகின்றோம்.

தாய்மொழி கடவுள் வழிபாடு செய்யும் எத்தனையோ சமயங்கள் இருக்கின்றன. அவற்றை நாடி மக்கள் செல்ல வாய்ப்புண்டு. ஏன் அனேக மக்கள் சென்றும் உள்ளார்கள். பிற மத குருமார்கள் மதசங்கங்கள் ஏழை மக்களுக்கு பண உதவி, கல்வி வசதி, பிறமொழி வகுப்புகள் போன்ற பல வழிகளில் உதவி புரிகின்றார்கள். ஆனால் எமது சைவக் குருமார் இவை ஒன்றிலும் மக்களுக்கு உதவி புரிவதாக இல்லை. விளங்காத மொழி பூசைதான் செய்யமுடியும். இதனால் எமது சைவ சமய மக்கள் எதிர் நோக்கும் பல பிரச்சனைகளை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இன்றைய கால கட்டத்தில் சைவ மக்கள் எதிர் நோக்கும் இவ் அறை கூவலுக்கு நாம் எப்படித் தீர்வு காணப்போகின்றோம். இதற்கு ஒரே தீர்வு தாய்மொழிப் பூசையே, எமது நாயன்மார்கள் காட்டிய வழியும் இதே. என்று ஆலங்களில் தமிழில் குருமார்கள் பூசை செய்கின்றார்களோ அன்று சைவ மக்களுக்கு ஒரு விடிவு காலம் ஏற்படும். தேவார, திருவாசக தமிழ் மந்திரங்கள் கருவறையில் ஒலிக்க நாம் ஆவண செய்தாலே சைவ மக்கள் இன்று எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்கு ஒரே தீர்வாகும். இதனால் ஆலய வழிபாட்டினை புறக்கனிக்கும் சைவ மக்கள் அனைவரும் ஆலங்களை நாடிவருவார்கள். சைவ சமயம் காப்பாற்றப்படும். நாயன்மார்கள் அருளிய பன்னிரு திருமுறைகளையும், பதின்னாங்கு மெய்கண்ட சாத்திரங்களையும் நாம் என்றும் மறக்கக் கூடாது. இவை சைவ ஆலயங்களில் ஒலிக்கவேண்டும்.

*(மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்)*



# வெற்றி பெற்றிட சில வழிகள்

திட்டமிடுதல் என்பது எந்த விசயத்திற்கும் மிக முக்கியமாகும்.

முன்னொரு காலத்தில் அந்த நகரத்திற்கு ஒரு சட்டமிருந்தது. அதன்படி யார் வேண்டுமென்றாலும் அந்த நகரத்திற்கு ராஜாவாக வரமுடியும். அரண்மனைக்குச் சென்று 'எனக்கு அரசர் பதவி வேண்டும்' என்று கேட்டால் போதும், அரியணையில் அமர்த்தி முடிசூட்டிவிடுவார்கள். ஆனால், அந்தப் பதவி ஐந்தாண்டுகள் மட்டுமே! ஐந்தாண்டு முடிந்த அடுத்த நாளே மன்னனை ஆற்றின் கரைக்கு மறுபுறம் உள்ள காட்டில் விட்டுவிடுவார்கள்.

அந்தக் காட்டில் மனிதர்கள் கிடையாது. வெறும் கொடிய விலங்குகள் மட்டுமே! மன்னன் காட்டிற்குள் நுழைந்தால் போதும்; வனவிலங்குகள் கொன்று தீர்த்துவிடும். இந்த சட்டத்தை யாராலும் மாற்ற இயலாது. இந்த நிபந்தனைகளுக்கு ஒப்புக் கொண்டவன் மட்டுமே அரியணையில் அமரப் பொருத்தமானவன். ஆக, மன்னனாக முடிசூட்டிக் கொண்டவனின் தலையெழுத்து, ஐந்தாண்டுகளுக்குப் பின் கட்டாய மரணம்.

இந்தக் கடுமையான சட்டத்துக்கு பயந்தே யாரும் அந்தப் பதவிக்கு ஆசைபடாமலிருந்ததால் அந்த அரியணை பெரும்பாலும் காலியாகவே இருந்தது. இருப்பினும் ஒரு சிலர் 'எப்படியிருந்தாலும் சாகத்தானே போகிறோம்; மன்னனாகவே மடியலாமே!' என்று பதவி ஏற்பதுண்டு. அதிலும் பாதி மன்னர்கள் இடையிலேயே மாரடைப்பால் மரணமடைவதுமுண்டு.

இப்படி ஒரு மன்னனுக்கு ஐந்து ஆண்டு ஆட்சிக்காலம் முடிந்தது. அன்று ஆற்றின் கரையைக் கடந்து காட்டிற்குச் செல்ல வேண்டும். அவனை வழியனுப்ப நாடே திரண்டிருந்தது.

மன்னன் வந்தான், அவனுடைய சிறப்பான ஆடைகளையும் நகைகளையும் அணிந்து, முடிசூடி, தங்க வாளேந்தி வைரங்கள் மின்ன மக்கள் முன் நின்றான். மக்கள் வாயைப் பிளந்தனர் 'இன்னும் அரை மணிநேரத்தில் சாகப் போகிறான் ; அதற்கு இவ்வளவு அலங்காரமா!'



தான் செல்லவிருந்த படகைப் பார்த்துவிட்டு சினத்துடன் கூறினான், ''மன்னன் செல்லும் படகா இது! பெரிய படகைக் கொண்டு வாருங்கள்! நான் நின்றுகொண்டா செல்வது! சிம்மாசனத்தைக் கொண்டு வாருங்கள்!''

கட்டளைகள் பறந்தன; காரியங்கள் நடந்தன! சற்று நேரத்தில் அலங்கரிக்கப்பட்ட அழகான படகு ஆற்று நீரைத் கிழித்துக் கொண்டு மறுகரை நோக்கிப் பயணித்தது.

மக்கள் திகைத்து நிற்க, மன்னன் கையசைக்க பயணம் தொடர்ந்தது.

மிகவும் அதிர்ச்சியடைந்தவன் படகோட்டியே! காரணம், இதுவரை அவன் மறுகரைக்கு அழைத்துச் சென்ற எந்த மன்னனும் மகிழ்ச்சியாக சென்றதில்லை. அழுது புலம்பி, புரண்டு, வெம்பிச் செல்வார்கள். இவனோ, மகிழ்ச்சிக் களிப்பில் பொங்கி வழிகிறான்.

படகோட்டி பொறுத்துக்கொள்ள முடியாமல் கேட்டான் 'மன்னா! எங்கே செல்கிறீர்கள் தெரியுமா?'

'தெரியும் மறுகரைக்குச் செல்கிறேன்!'

''அங்கே சென்றவர்கள் திரும்ப இந்த நகரத்திற்கு வந்ததில்லை தெரியுமா?''

''தெரியும். நானும் திரும்ப இந்த நகரத்திற்கு வரப் போவதில்லை!''

''பின்னே எப்படி உங்களால் இவ்வளவு மகிழ்ச்சியாக இருக்க முடிகிறது?''

''அதுவா! நான் என்ன செய்தேன் தெரியுமா? ஆட்சிக்கு வந்த ஓராண்டு முடிவில் ஆயிரம் வேட்டைக்காரர்களைக் காட்டிற்கு அனுப்பினேன்; அவர்கள் கொடிய விலங்குகளை வேட்டையாடிக் கொன்று விட்டார்கள்!

இரண்டாமாண்டு முடிவில் ஆயிரம் விவசாயிகள் சென்றார்கள்; காட்டைத் திருத்தி உழுதார்கள்; இன்று ஏராளமான தானியங்கள் காய்கறிகள்.

மூன்றாமாண்டு முடிவில் ஆயிரம் கட்டடக்கலை வல்லுநர்கள், தொழிலாளர்கள் சென்றனர். இன்று வீடு, வாசல், அரண்மனை, அந்தப்புரம், சாலைகள் எல்லாம் தயார்!

நான்காம் ஆண்டு முடிவில் ஆயிரம் அரசு அதிகாரிகள் சென்றனர். நிர்வாகம் சீரடைந்தது. இந்த 4000 பேரும் தங்கள் மனைவி, குழந்தைகளுடன் சென்று அங்கே வாழ்கின்றனர்.

இப்போது நான் காட்டிற்குப் போகவில்லை; என்னுடைய நாட்டிற்குப் போகின்றேன்! சாகப் போகவில்லையப்பா, வாழப் போகின்றேன்! அதுவும் மன்னனாக ஆளப்போகிறேன்! உனக்கு ஒருவேளை அரண்மனைப் படகோட்டி வேலை வேண்டுமென்றால், இந்தப் படகோடு இப்படியே வேலைக்கு சேர்ந்து விடு!'' என்றான் மன்னன்.

ஒரே ஒரு கேள்வியை மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

மன்னனின் வெற்றிக்குக் காரணங்கள் யாவை?

பல காரணங்கள் இருந்தாலும் குறிப்பாக இரண்டினைக் கூறலாம்.

ஒன்று : ஐந்து ஆண்டுகளுக்குப் பின் உயிர் வாழவேண்டும்; அதுவும் மன்னனாகவே வாழவேண்டும் என்று முடிவு எடுத்தது.

இரண்டு : அந்த முடிவினை அடைவதற்காக திட்டமிட்டு உழைத்தது!

அந்த மன்னனுடைய வெற்றிக்கு மட்டுமல்ல; நாம் அனைவருமே வெற்றி பெறவேண்டுமென்றால் நமக்குத்தேவை ஒரு இலக்கை நிர்ணயித்தலும் அதற்காக திட்டமிடுதலும், திட்டமிட்ட பின் வெற்றி பெறும்வரை கடுமையாகவும் புத்திசாலித்தனமாக உழைப்பதுமே

இப்போது நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதுதான் உங்கள் எதிர்காலம்!

இப்போது ஒருவன் கடுமையாக உழைக்கிறானே அதுதான் அவனுடைய வருமானமாகப் பின்னால் வரும்!

இப்போது ஆழ்ந்து படிக்கும் மாணவனுக்கு அதுதான் தேர்ச்சி என்று ஒரு எதிர்காலத்தைக் கொண்டுவரும்.

அப்படிப் பார்த்தால் எல்லாமே இப்போது நாம் செய்வது செய்து கொண்டிருப்பதுதான் நம் நாளைய வாழ்வைத் தீர்மானிக்கிறது. அவை ஒவ்வொன்றையும் திட்டமிட்டு சிறப்பாகச் செய்தால் நம் வாழ்க்கை எவ்வளவு மேன்மையாக அமையும்!

மேற்கண்ட கதையை கவனியுங்கள்!

'ஐந்து ஆண்டுக்குப் பிறகு காடும் சாவும்தான் விதி' என்ற விதியை மதியால் எப்படி மாற்றினான்?

வறுமையும், நோயும், மன உளைச்சலும், அவமதிப்பும்தான் நம்முடைய விதியா?

பசி, பிணி, மூப்பு, சாக்காடுதான் தலையெழுத்தா? எப்படியும் மரணம்தான் என்பது ஆண்டி முதல் அரசன் வரை அனைவருக்கும் வகுக்கப்பட்ட விதியாக இருந்தாலும், இறுதிக் காலத்தை ஏன் இறுகிப்போன காலமாகக் கழிக்க வேண்டும்?

அதற்காகத் துல்லியமாகத் திட்டமிடுங்கள்.

எப்போது செய்ய வேண்டும் என்று அழகாகத் திட்டமிடுங்கள்.

எந்த ஒரு செயல் செய்வதற்கு முன் திட்டமிடுங்கள், அந்த திட்டத்தை செயல் படுத்துவதற்கு முன் பலமுறை யோசியுங்கள். நன்றாக இருக்கும் என்று நாம் உணர்ந்த பின் அதை செயல்முறை படுத்துங்கள் பின் வெற்றி நமக்கே!

2. குறையை நிறையாக்க...

ஒரு கிறித்துவ தேவாலயத்தில் புதிதாக ஒரு மதகுரு பொறுப்பேற்றார். அவர் நிர்வாகத்தை முற்றிலும் மாற்றி அமைக்க முடிவு செய்தார் தேவாலயத்தில் பணிபரியும் எல்லோருக்கும் எழுதப்படிக்க தெரிய வேண்டும் என்று எதிர் பார்த்தார். கையெழுத்துக் கூட போடத் தெரியாதவர்களை வேளையைவிட்டு நீக்கிவிடுவேன் என்று எச்சரித்தார். கொஞ்ச அவகாசமும் கொடுத்தார்.


அங்கு கூட்டிப் பெருக்கும் ஏழைத் தொழிலாளிக்கோ என்ன முயன்றும் எழுதப்படிக்க வரவில்லை. கையெழுத்து கூட போட் முடியவில்லை. எவ்வளவு கெஞ்சியும் மதகுரு மசியவில்லை. வேலையை விட்டு நீக்கிவிட்டார். மிகுந்த வருத்ததுடன் சோர்வாகத் தேவாலயத்தைவிட்டு வெளிய வந்த ஏழைக்கு வேதனை. சொல்லமுடியாத வேதனை. பலவருட பந்தம் பறிபோய்விட்டது. அழுதபடி திரும்பி திரும்பி தேவாலையத்தை பார்த்தபடி நடந்து கொண்டிருந்தார். மனவேதனை மறைய ஒரு சிகரேட் பிடிக்கலாம் என்று நினைத்தால் பாக்கெட்டில் ஒரு சிகரெட் இல்லை. பக்கத்தில் பார்த்தால் சிகரெட் கடைகூட ஒன்றும் இல்லை. நெடுந்தூரம் நடந்துவிட்டார் ம்ஹூம்... சிகெரட் கடையே இல்லை.

பட்டென்று அவருக்கு பொறித் தட்டியது. "நாம் ஏன் இங்கு சிறிய பெட்டிக் கடை வைக்கக் கூடாது... இங்கே வருகிற பலபேருக்கு பயன்படுமே" என்று முடிவு செய்தார். வெளியே அனுப்பும் போது மதகுரு கொடுத்த சிறிய தொகையை முதலாக்கி சிகரெட்டுடன் மற்றும் பல பொருட்களுடன் கடை ஆரம்பித்தார். வியாபாரம் அமோகமாக நடந்தது... சிறிது காலத்தில் கடையை விரிவுபடுத்தி வியாபாரத்தை பெரியதாக்கினார். சில மாதங்களில் பெரிய பணக்கரார் ஆகிவிட்டார்.

இவரிடம் பணம் இருப்பது தெரிந்து ஒரு வங்கியின் மேலாளர் தங்கள் வங்கியில் சேமிக்கும்படியும் வட்டி கிடைக்கும் என்றும் சொல்லி சம்மதிக்க வைத்தார். முடிவில் சேமிக்க விண்ணப்பபடிவங்கள் நிறைவு செய்துவிட்டு பணக்காரரிடம், "கையொப்பம் போடுங்கள்" என்றார். பணக்காரருக்கு வந்ததே கோபம்... நிறைய சத்தம் போட்டுவிட்டு முடிவில், தனக்கு கையெழுத்து போடத் தெரியாது என்று முடித்தார்.

வங்கி மேலாளர் "அட... கையெழுத்து கூட போடத் தெரியாமலேயே இவ்வளவு பெரிய வியாபாரியாகி விட்டீர்கள்... உங்களுக்கு அதுவும் தெரிந்திருந்தால் அடடா நீங்கள் எங்கேயோ இருந்திருப்பீர்கள்?" என்று புகழ்ந்ததும் "வாயை மூடுங்கள்.. எனக்கு மட்டும் கையெழுத்து போடத் தெரிந்திருந்தால் தேவாலயத்தில் கூட்டி பெருக்கும் தொழிலாளியாகத்தான் இன்னும் இருந்திருப்பேன்" என்று கர்ஜித்தார்.

இது வெறும் கதையல்ல. குறைகூட ஒருநாளில் நிறைவாகலாம். நம்மில் பலருக்கு பல குறைகள் இருக்கும் அதை நினைத்து வருத்தபடுவது உண்டு. வருத்தபடுவதால் எந்த மாற்றமும் நிகழப்போதில்லை. அந்த குறையை நமது பலமாக மாற்ற என்ன செய்யலாம் என்று எண்ணி அதை செயல்படுத்தினால் வெற்றி நிச்சயம்...


கறுப்பு
ஜூலை
23

# மூதுரை



௨௰௭


அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வா ருறவல்லர் - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு.

நீர் வற்றியதும், குளத்திலிருந்து நீங்கிவிடும் நீரில் வாழும் பறவைகளைப் போல துன்பம் வந்த போது நீங்கி விடுபவர்கள் சுற்றத்தார் ஆக மாட்டார்கள். அந்தக் குளத்திலுள்ள கொட்டிப்பூண்டையும், அல்லிக்கொடியையும், குவளைக் கொடியையும் போன்றவர்களாக சேர்ந்து, (நீர் ஏற உயர்ந்தும், நீர் குறையத் தாழ்ந்தும் இருத்தல் போல) இன்பத்தையும் துன்பத்தையும் ஏற்றுக் கொள்பவர்களே நல்ல சுற்றத்தவர் ஆவார்கள்.

(கருத்து - இன்பக் காலத்தும், துன்பக் காலத்தும் இசைந்து சேர்ந்து இருப்போரே சிறந்த சுற்றத்தார் ஆவார் என்பதாம்.)

# லைகாவின் ஞானம் அறக்கட்டளை:
## வடக்கு கிழக்கில் 3000 மில்லியன் ரூபாய் நிதியீட்டத்துடனான மக்கள் பணிகள் ஆரம்பம்

(லண்டன். ஜீலை 02) இலங்கையின் வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வாழ்வாதார வருவாய்க்கான மூலாதாரத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல், மாணவர்கள் மத்தியில் கல்விமேம்பாட்டினை ஏற்படுத்தல் போன்ற பல மேன்மையான திட்டங்கள்மீது, 3000 மில்லியன் ரூபாய்கள் நிதியீட்டத்துடன் லைகாவின் ஞானம் அறக்கட்டளையினால் மேற்கொள்ளப்படும் இரண்டாம் கட்டப்பணிகள் வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.




ஆக்கபூர்வமான



பல திட்டங்களை இலக்கு வைத்து பாரிய நிதியீட்டத்துடன் கூடிய இந்த மக்கள் நலன் புரித்திட்டங்களைச் செவ்வனே மேற்கொள்ளும் நோக்கில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மன்னார் போன்ற எட்டு மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள பிராந்தியக் காரியாலயங்களை லைகாவின் ஞானம் அறக்கட்டளையின் போஷகர் திருமதி ஞானாம்பிகை அல்லிராஜா, லைகாவின் ஞானம் அறக்கட்டளை மற்றும் லைகா மொபைல் நிறுவனத்தின் தலைவர் திருவாளர் அல்லிராஜா சுபாஸ்கரன், லைகா மொபைல் நிறுவனத்தின் பிரதித்தலைவர் திருவாளர் பிறேம் சிவசாமி மற்றும் லைகாமொபைல் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கிறிஸ்டூலி ஆகியோர் கடந்தவாரம் வைபவ ரீதியாகத் திறந்து வைத்துள்ளனர்.

"பட்டினி கிடப்பவனுக்கு மீன் ஒன்றை ஒரு வேளை உணவாகக் கொடுப்பதிலும் பார்க்க, அவனுக்கு மீன் பிடிக்கக் கற்றுக் கொடுப்பதனூடாக வாழ்நாள் முழுவதும் அவனுக்கு உணவளிக்க முடியும்" என்ற முதுமொழியை கருப் பொருளாகக் கொண்டே லைகாவின் ஞானம் அறக்கட்டளை இயங்கிவருகிறது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இந்தத் திட்டங்களை சுமுகமாகவும், திறமையாகவும் அமுல்படுத்துவதற்காக எட்டு அதிகாரிகளுடன் கூடிய சுமார் 40 பேர் கொண்ட அணியொன்றும் உள்வாங்கப்பட்டிருக்கிறது.

### முல்லைத்தீவு

கடந்த ஞாயிற்றுக் கிழமை (ஜீன் 22) முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள நீராவிப்பிட்டி கிழக்கு முள்ளியவளையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பிராந்தியக் காரியாலயத்தை இவர்கள் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்து இரண்டாம் கட்டப் பணிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். சமூக சேவை ஆர்வலர்கள்,



ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். தெரிந்தெடுக்கப்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள், தையல் இயந்திரங்கள், மாணவர்களுக்கான கல்விநிதியுதவிகள், துவிச்சக்கர வண்டிகள், பென்சில்கள், பேனாக்கள், அப்பியாசப் புத்தகங்கள், மாற்றுத் திறனாளிகளுக்கான முச்சக்கர வண்டிகள் எனப் பல்வேறு அன்பளிப்புப் பொருட்கள் அங்கு குழுமியிருந்த பயனாளிகளுக்கு லைகாவின் ஞானம் அறக்கட்டளை நிறுவனத்திரனரால் வழங்கப்பட்டன.



## கிளிநொச்சி

யுத்தத்தின் பேரழிவுகளைச் சந்தித்த தமிழ் மக்கள் வாழ்ந்து வரும் கிளிநொச்சி மாவட்டத்தின் திருநகரில் அமைக்கப்பட்டுள்ள புதிய காரியாலத்தினை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் திறந்து வைத்த இவர்கள், அங்கும் தெரிந்தெடுக்கப்பட்ட குடும்பங்களிற்கான வாழ்வாதார உதவிகளையும், மாணவர்களுக்கான நிதியுதவிகள் மற்றும் பாடசாலை உபகரணப் பொருட்களையும், மாற்றுத்திறனாளிகளுக்கான அன்பளிப்புப் பொருட்களையும் கையளித்தனர்.

இந்த இரண்டாம் கட்டப்பணிகளில் குறிப்பாக, "மிக



மோசமாகப் பாதிக்கப்பட்ட சமூகங்களின் கல்வி மற்றும் வாழ்வாதார அனுசரணைத் திட்டம்" என்ற திட்டத்தினூடாக சுமார் 10,000 ற்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கும், 660 குடும்பங்களுக்கும் லைகாவின் ஞானம் அறக்கட்டளை வருடாந்தம் அனுசரணை வழங்கவிருக்கிறது.

இதன் பிரகாரம், இலங்கையின் மேற்குறிப்பிட்ட 11 மாவட்டங்களிலிருந்து வருடாந்தம்தலா 55 குடும்பங்கள் விகிதம் தெரிந்தெடுக்கப்பட்டு, அவர்களின் குடும்பங்களில் நிலவும் வறுமையை நிரந்தரமாக இல்லாதொழிக்கும் நோக்கில், குடும்பமொன்றிற்கு ஒரு குறித்த தொகையினை வழங்கி அவர்களின் நிரந்தர வாழ்வாதார மூலத்தினை ஏற்படுத்திக் கொடுப்பதே நோக்கமாகும்.

## யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தின் நான்காம் குறுக்குத் தெருவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள லைகாவின் ஞானம் அறக்கட்டளையின் பிராந்திய அலுவலகம் திங்கட்கிழமையன்று திறந்து வைக்கப்பட்டது. பலத்த வரவேற்பிற்கு மத்தியில் நல்லூர் துர்க்கா மண்டபத்தில் இதன் பின்னர் இடம் பெற்ற விசேட நிகழ்வில் பயனாளிகளுக்கான கொடுப்பனவுகளும், அன்பளிப்புப் பொருட்களும் கையளிக்கப்பட்டன. அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், சமூகசேவை அதிகாரிகள், ஆர்வலர்களெனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

வவுனியா லைகாவின் ஞானம் அறக்கட்டளையின் வவுனியா மாவட்ட அலுவலகம் குருமன்காடு கோயில் வீதியில் திங்கட்கிழமையன்று திறந்து வைக்கப்பட்டது. அங்கு இடம்பெற்ற விசேட நிகழ்வில் பயனாளிகளுக்கான உதவிப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

ஏற்கனவே இரண்டாம் கட்டப்பணிகளுக்காக உறுதியளிக்கப்பட்ட 3000 மில்லியன் ரூபாய்களுக்கு மேலதிகமாக, வவுனியா மாவட்டத்தின் பூந்தோட்டம் அகதிகள் முகாமிலுள்ள 150 அகதிகள் தமது காணிகளில் வீடுகளைக் கட்டுவதற்கான நிதியீட்டத்தினையும் வழங்க லைகாவின் ஞானம் அறக்கட்டளை உறுதியளித்திருக்கின்றது.



பிராந்திய அலுவலகத்தினை வைபவரீதியாகத் திறந்து வைப்பதற்காக வவுனியா சென்றிருந்த லைகாவின் ஞானம் அறக்கட்டளை மற்றும் லைகா மொபைல் நிறுவனத்தின் தலைவர் திரு அல்லிராஜா சுபாஸ்கரன், லைகா மொபைல் நிறுவனத்தின் பிரதித்தலைவர் திருவாளர் பிறேம் சிவசாமி ஆகியோர், பூந்தோட்டம் அகதிமுகாமில் நீண்டகாலம் அல்லலுறும் மக்களுக்கு நிரந்தமான வதிவிடங்களை வழங்கும் நோக்கிலேயே, 150 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கான நிதியினை வழங்குவதாக உறுதியளித்திருக்கின்றனர்.



## திருகோணமலை

திருகோணமலைக்கான மாவட்டக் காரியாலயம் செவ்வாய்க் கிழமையன்று லைகாவின் ஞானம் அறக்கட்டளையின் போஷகர் திருமதி ஞானாம்பிகை அல்லிராஜா, லைகாவின் ஞானம் அறக்கட்டளை மற்றும் லைகா மொபைல் நிறுவனத்தின் தலைவர் திருவாளர் அல்லிராஜா சுபாஸ்கரன்,




லைகா மொபைல் நிறுவனத்தின் பிரதித் தலைவர் திருவாளர் பிறேம் சிவசாமி ஆகியோரினால் வைபவரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது.

இதன் பின்னர் திருகோணமலை மாநகர மண்டபத்தில் இடம் பெற்ற விசேட நிகழ்வில் பயனாளிகள், சமூக முக்கியஸ்தர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

அரங்கம் நிறைந்த இந்த நிகழ்வில் உரையாற்றிய லைகா மொபைல் நிறுவனத்தின் பிரதித் தலைவர் திருவாளர் பிறேம் சிவசாமி, யுத்தத்தினால் மிகமோசமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வாழ்வாதார உதவிகளை வழங்குதல், எதிர்கால சந்ததியாகிய மாணவர்களிடையே கல்வி மேம்பாட்டினை ஏற்படுத்தல் போன்ற பல திட்டங்களை இலக்கு வைத்தே, பாரிய நிதியீட்டத்துடன் கூடிய பன்முகப்படுத்தப்பட்ட மக்கள் நலன்புரித் திட்டங்களுடனான இந்த இரண்டாம் கட்டப் பணிகள் லைகாவின் ஞானம் அறக்கட்டளையினால் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்தார்.

## மட்டக்களப்பு

கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு புதிய வன்னியர் வீதியில் அமைந்துள்ள பிராந்தியக் காரியாலயத்தினை வியாழக்கிழமை காலை திறந்து வைத்த இவர்கள், மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வில் பயனாளிகளுக்கான அன்பளிப்புப் பொருட்களையும் கையளித்தனர்.

## அம்பாறை

அம்பாறை மாவட்டக் காரியாலம் அக்கரைப்பற்று பொத்துவில் வீதியில் வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்து. இதன் பின்னர் அத்தாவுல்லா கலையரங்கத்தில் இடம் பெற்ற அன்பளிப்புக்களைக் கையளிக்கும் விசேட நிகழ்வில் மூவின மக்களும் பெரிய எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

சகல சமூகத்தையும் சார்ந்த பயனாளிகளால் நிரம்பிவழிந்த அந்த அரங்கில் உரையாற்றிய லைகா மொபைல் நிறுவனத்தின் பிரதித்தலைவர் திருவாளர் பிறேம் சிவசாமி அவர்கள், லைகாவின் ஞானம் அறக்கட்டளை என்பது இன,





மத, மொழி வேறுபாடின்றி மக்கள் நலன்புரிச் சேவைகளை ஆற்றிவரும் ஒரு அமைப்பு என்றும், மக்கள் குறை தீர்க்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும் என்று உறுதியளித்தார்.

## மன்னார்

வியாழக்கிழமை பிற்பகல் மன்னாரில் செபஸ்டியன் கோயில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள மாவட்ட அலுவலகத்தினை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்த இவர்கள், மன்னார் நகர சபை மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட நிகழ்வில் பயனாளிகளுக்கான அன்பளிப்புக்களை வழங்கினார்கள். இந்த நிகழ்விற்கு மன்னார் மாவட்டத்தின் பிராந்திய கல்வி அதிகாரிகள், அதிபர்கள், மாணவர்கள், மன்னார் மற்றும் மடுபிரதேசங்களைச் சேர்ந்த பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து சுமார் ஐந்து வருடங்கள் பூர்த்தியாகியுள்ள நிலையிலும்கூட, போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் தமது எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்காகவும், உறுதித் தன்மைக்காகவும், அரசாங்கத்திடமிருந்தும், சர்வதேச தன்னார்வத் தொண்டர் அமைப்புக்களிடமிருந்தும் பல்வேறு ஆதரங்களை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இவ்வாறு அவர்கள் எதிர்பார்க்கும் உதவிகள், ஆதாரங்கள் கடந்த பல வருடங்களாகக் கிடைக்காதிருக்கும் நிலையில், யுத்தத்தின் மோசமான விளைவுகளைச் சந்தித்த பிரதேசங்களில் வறுமையுடன் கூடிய நிலைமைகள் மிகவும் மோசமாகிக் கொண்டுசெல்வது அவதானிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாகநாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழ்ந்துவரும் இளம் சமுதாயத்தினரும், சிறார்களும் விடைகாண முடியாத மிகவும் மோசமானதொரு சமூகபொருளாதார சிக்கல்களுக்கு முகம் கொடுத்து வருகிறார்கள்.

அபாயங்கள் நிறைந்த உள்ளூர் இடம் பெயர்வுகள், சுயமாகவும், பெற்றோரின் உந்துதலின் பேரிலும் மேற்கொள்ளப்படும் சட்டரீதியற்ற இடப்பெயர்வுகள், சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்படுதல், துஷ்பிரயோகங்கள் போன்றவை இந்த இளஞ்சமுதாயத்தின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் ஊறுவிளைவிக்கும் முக்கியவிடயங்களாகும்.

இவ்வாறானதொரு மோசமான புறச்சூழலில்தான், லைகாவின் ஞானம் அறக்கட்டளை சுமார் 3000 மில்லியன் ரூபாய்களைத் தொடர்ந்தும் வழங்க உறுதியளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், பகிர்ந்தளிக்கப்படும் நிதி என்பன சிறார்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் நேரடியாகவே ஆதரவளிப்பதனை நோக்காகக் கொண்டது. இதன் மூலம் அவர்களது வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதனூடாக பாடசாலைக்குச் செல்லாதிருக்கும் சிறுவர்களின் எண்ணிக்கையிலும், பாடசாலையிலிருந்து இடைவிலகும் சிறுவர்களின் எண்ணிக்கையிலும் பாரிய வீழ்ச்சியை ஏற்படுத்தல், அவர்களின் உடல், உள மேம்பாட்டினை ஏற்படுத்தல், ஆசிரியர்மாணவர் இடையே சுமுகமான உறவினை ஏற்படுத்தல், நாளாந்த வாழ்வில்மகிழ்ச்சியாக சமூக மேம்பாட்டு நடவடிக்கையில் ஈடுபடுதல் போன்றனவற்றை உறுதிப்படுத்துவதனை எட்டுவதே லைகாவின் ஞானம் அறக்கட்டளையின் பிரதான நோக்கமாகும்.

2010 டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு சீரிய முறையில் அறம் புரிந்துவரும் லைகாவின் ஞானம் அறக்கட்டளை என்பது லண்டனைத் தளமாகக் கொண்டியங்கும் லைகா மொபைல் நிறுவனத்தினால் முழுமையாக நிதியீட்டம் செய்யப்படும் ஒரு சுதந்திரமான அமைப்பாகும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



# சமச்சீர் உணவு

முகைதீன்

நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய்களில் கொழுப்பு சத்தும், கலோரியும் அதிகமாக இருப்பதால் இதை பயன்படுத்தாதீர்கள் என்று மருத்துவர்களால் அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது. இதன் காரணமாக பெரும்பாலான வீடுகளில் மேற்கண்ட எண்ணெய் வகைகளை பயன்படுத்துவதை விட்டு விட்டு சர்க்கரை இல்லாத, கொழுப்பும் இல்லாத, குறைவான கலோரி கொண்ட சத்தே இல்லாத பாமாயில் போன்ற பத்திய எண்ணெய்களை பயன்படுத்தி வருகிறோம். குழந்தைகளின் உணவிலும் இது போன்ற எண்ணெய்களை பயன்படுத்துவதால் குழந்தைகளின் உடலுக்கு தேவையான கொழுப்பு சத்து கிடைக்காததால் நம் குழந்தைகளை நாமே ஆரோக்கியமற்ற குழந்தையாக மாற்றுகிறோம்.

அல்சர் நோயாளிகளுக்கு காரமே இல்லாத சமச்சீர் உணவு முறை, நீரழிவு நோயாளிக்கு இனிப்பே சேர்க்கப் படாத உணவு முறை, ஆரோக்கியமானவர்களுக்கும், குணப்படுத்த தெரியாத நோய்களிடம் மாட்டி கொள்ளாமல் இருக்க எண்ணெய்களை, காரத்தை, உப்பை, இனிப்பை தவிர்க்க அல்லது குறைத்துக் கொள்ள பரிந்துரைக்கிறார்கள். இதனை உணவு கட்டுபாடு என்றும் சமச்சீர் உணவு என்றும் அழைத்துக் கொள்கிறார்கள்.

சமச்சீர் உணவு என்றால் அது அறுசுவை கொண்டதாக தான் இருக்க வேண்டும். இது வேண்டாம் அது வேண்டாம் என்று சொல்வதற்கு பெயர் சமச்சீர் உணவாம்.

**சமச்சீர் உணவு என்றால் என்ன?**

இஸ்லாமியர்களின் உணவு முறையில் கொழுப்பு மிக்க உணவுகள் வகைகள் அதிகமாக இருக்கும். அத்தோடு இவர்கள் உணவில் இஞ்சி, வெள்ளைப்பூடும் அதிகமாக சேர்க்கப்பட்டிருக்கும். வெள்ளைப்பூடு, பல்லாரி,


கொண்டைக்கடலை ஆகியவைகளுக்கு இரத்த நாளத்தில் ஏற்படும் அடைப்புகளை திறக்கச் செய்யும் வல்லமையை இறைவன் வழங்கியுள்ளான். இப்போது புரிந்திருக்கும் இஸ்லாமியர்களின் உணவில் அதிக அளவில் பூண்டு சேர்த்துக் கொள்ளப்படுவதன் நோக்கம்.


மிக்சர் காரச்சேவு முதலியவகைகள் கடலை மாவையும், கடலெண்ணெயையும் கொண்டு தான் தயாரித்தார்கள். ஏனென்றால் கடலை மாவும், கடலெண்ணெயும், கொண்டை கடலையின் வழி தோன்றல்கள், கொண்டை கடலைக்கும் இரத்த நாளத்தில் ஏற்படும் அடைப்புகளை திறக்கச் செய்யும் வல்லமையை இறைவன் வழங்கியுள்ளான். இதுவல்லவா சமச்சீர் உணவு.


விருந்து என்றால் சற்று அதிகமாக சாப்பிடுவது மனித இயல்பு. அவ்வாறு விருந்து உண்டால் தாம்பூலம் தரிக்கச் சொல்கிறது நம் மரபு. தாம்பூலம் தரித்தல் என்றால் புகையிலை அல்லாத வெற்றிலை, பாக்கு மற்றும் சுண்ணாம்பு சேர்ந்த கலவை. இதை சாப்பிடுவதால் அதிகப்படியாக உமிழ்நீர் சுரக்கப்பட்டு முறையாக ஜீரணம் நடைபெற உதவும். விருந்துக்கு செல்லுமிடத்தில் குடி தண்ணீர் மாற்றத்தினால் தொண்டை சம்பந்தமான நோய்கள் ஏற்படலாம் இந்த வகையான நோய்களையும் வெற்றிலை குதப்புவதால் தடுக்கலாம். தொண்டை பிரச்சனைகள் வரக்கூடாது என்பதற்காவே பாகவதர்கள் வெற்றிலையை குதப்பி வந்துள்ளார்கள். இதுவல்லவா சமச்சீர் உணவு முறை.

சைவம் மட்டுமே சாப்பிடுகிறவர்கள் கொழுப்பு சத்திற்காக நெய் சேர்த்துக் கொள்கிறார்கள். மேலும் தயிர் போன்ற கொழுப்பு மிக்க உணவுகளையும் தங்களது உணவோடு உண்டு வருகிறார்கள். சைவ உணவில் கொழுப்பு சத்து குறைவாகத் தானிருக்கும். ஆகையால் நெய்யையும், தயிரையும் சேர்த்து சாப்பிடுவதால் கொழுப்பு சத்து உடலுக்கு கிடைத்து விடும். கொழுப்பு சத்தின் முக்கியத்துவத்தை இதன் மூலம் நாம் புரிந்துக் கொள்ளலாம்.

வேர்கடலை தின்றால் பித்தம், ஆகையால்








**"Food** is the most powerful control you own over your entire **life."**

- Julieanna Hever



வேர்கடலை தின்றபின் சிறு துண்டு கருப்பு கட்டியாவது சாப்பிட்டு விட வேண்டும் என்று நமது முன்னோர்கள் கூறுவதை கேட்டுள்ளோம். இதுவல்லவா சமச்சீர் உணவு.

சமச்சீர் உணவு என்பது சத்தில்லாத உணவல்ல. எல்லா சத்துக்களும் அளவோடு இருப்பது தான் சமச்சீர் உணவு. உதாரணத்திற்கு பிரியாணி போன்ற கொழுப்பு சத்துகள் அதிகம் உள்ளதை சாப்பிடும் போது வெங்காய சம்பல் தருகிறார்கள், அந்த சம்பலில் பல்லாரி சேர்க்கப்பட்டிருக்கும். பல்லாரி இரத்த நாளத்தில் அடைப்பை ஏற்படுத்தும் கொழுப்புகளை நீக்கும் சக்தி கொண்டது. இதே சம்பலை அதிகமாக உட்கொண்டால் ஜீரணக் கோளாறு ஏற்படும். ஆகையால் இது பித்தம், அது காமாலை, மற்றது சுகர் என்று ஒதுக்காமல் வேதிப் பொருட்கள் கலப்பில்லாதா உணவுகளை பசிக்கும் போது தேவைக்கு புசிப்பது நல்லது.

**எந்த உணவு சத்தானது?**

எதை சாப்பிடுகிறோம் என்பதை விட எப்படி சாப்பிடுகிறோம் என்பது தான் முக்கியம். முறை தவறி உட்கொள்ளும் உணவால் உடலுக்கு எந்த பயனும் இல்லை. அப்படியென்றால் எப்படி சாப்பிடுவது என்ற கேள்வி வரும். எளிதான சுருக்கமான பதில் தான். அதாவது நாம் உண்ணும் உணவை அவரவர் உமிழ்நீரை கொண்டு நன்றாக கூழாக்கி சாப்பிட்டால் நாம் சாப்பிட்ட உணவு நன்றாக ஜீரணமாகி முழுமையான சத்துக்களும் உடலுக்கு கிடைக்கும்.

முன் பக்கங்களில் குறிப்பிட்டுள்ள பிளேடு மற்றும் கவராயத்தின் ஊசி சம்பவங்களிலிருந்து உடல் தேவையற்ற பொருளை பாதுகாப்பான முறையில் வெளியேற்றி விடும் என்பதை புரிந்து கொண்டோம். ஆனால் நாம் உண்ணும் உணவை மென்றது போக நம் உடல் உறுப்புகளும் நன்றாக கூழாக்குகின்றன. இதிலும் நமக்கு ஒரு படிப்பினை உள்ளது. அதாவது உணவு பொருட்களை மட்டும் நம் உடல் இனம் கண்டு அதனை கூழாக்கி அதிலிருக்கும் சக்திகளை நம் உடல் உறிஞ்சிக் கொள்கின்றன. மாறாக உடலிலுள்ள அசுத்தங்களையும், உடலுக்கு ஒவ்வாத பொருட்களையும், கிருமிகளையும் உடலுக்கு தேவையற்ற பிளேடு, கவராயம் போன்ற பொருட்களை உடல் பாதுகாப்பாக வெளியேற்றி விடுகிறது.

நாம் உண்ணும் போது அந்த உணவில் நமது உமிழ் நீர் கலந்துவிடும். ஆனால் நண்பன் விழுங்கிய கவராயம், பிளேடில் உமிழ்நீர் எவ்வகையிலும் கலக்க இயலாததால் அதை உடல் உறுப்புகள் இனம் கண்டு ஜீரணத்திற்கு உட்படுத்தாமல் பாதுகாப்பாக வெளியேற்றி விடுகின்றன. இதிலிருந்து உமிழ் நீர் கலக்கப்படாத எந்தப் பொருளையும் உடல் ஜீரணத்திற்காக எடுத்துக் கொள்ளாது என்பது தெளிவாகிறது. அரைகுறையாக உமிழ்நீர் கலக்கப்பட்ட உணவு பொருட்களும் சரியாக ஜீரணம் செய்யப்படாததால் தரக் குறைபாடுள்ள குளுக்கோஸ் அந்த உணவுகளிலிருந்து கிடைக்கிறது.

தற்காலத்தில் நாம் அதிக வேகத்தில் செயல்பட்டு வருவதால் சாப்பாட்டை கூட முறையாக உட்கொள்ள நம்மில் பெரும்பாலானவர்களுக்கு நேரமில்லை. ஆகையால் அவசர கதியில் உணவை உட்கொள்வதால் நாம் உண்ணும் உணவுடன் கலக்க வேண்டிய உமிழ் நீர் தேவையான அளவிற்கு கலக்கப் படாததால் முறையாக செரிமானம் செய்யப்படாததால் நாம் உண்ட உணவு வீணாகி கொண்டிருக்கின்றன. நாம் சாப்பிட்ட உணவு நன்றாக ஜீரணமாகி முழுமையான சத்துக்களும் உடலுக்கு கிடைக்க வேண்டுமென்றால் இதற்காக சில எளிய நடைமுறைகளை நம் வாழ்வில் கடைபிடித்தால் போதும் நமது குடும்பத்தின் மாதந்திர மருத்துவ பட்ஜெட்டை இல்லாமல் ஆக்கி விடலாம்.

கரவை மு. தயாளன்

# சில மனிதர்களும் சில நியாயங்களும்

வந்த செய்தி துக்கமானதுதான். யாருமே எதிர்பார்க்காத செய்தி. மகேந்திரத்தாரின் தம்பியின் மனைவி மரணமானதுதான். இதை எப்படி தகப்பனுக்குச் சொல்வதென்று புரியாமல் தவித்தாள் ஆதித்யா. அப்பாவால் இதைத்தாங்கிக்கொள்ள முடியுமா என்றெல்லாம் பதறினாள். ஆனால் சொல்லித்தானே ஆகவேண்டும். எல்லோரும் அவளையே பார்த்துக்கொண்டிருந்தனர். ஆரணி மெதுவாக அக்காவின் பக்கமாக வந்தாள். ஆரணியின் மனதில் ஏதோ தாஸைப்பற்றியதாக இருக்குமோ என்ற சந்தேகம் இருந்தது. அதனால் தமக்கைக்கு அருகில் வந்து அவளையே பார்த்தாள். ஆதிக்கும் அது புரிந்தது. இதைத் தவிர்ப்பதற்காக தொலைபேசி இலங்கையிலிருந்துதான் வந்தது என்றாள். இந்தச் செய்தி ஆரண்யாவின் சந்தேகத்தைத் தீர்த்துவிட்டது. மற்றவர்களை இன்னும் வியப்பிலேயே வைத்திருந்தது.

“ஆரம்மா போன் பண்ணினது?” என்று மகேந்திரத்தார் கேட்டார்.

சிறிது நேரம் மெளமனம்.

“சித்தப்பா போன் பண்ணினவர்”

“ஏன் என்னவாம்?”

ஆதித்யாவின் கண்கள் இதற்குமேல் தன்னைக் கட்டுப்படுத்த முடியாமல் காட்டிக்கொடுக்க ஆரம்பிக்க “ சினனம்மா ஜீயளளநன யறயல”என்றாள்.

அந்த இடம் நிசப்தமாகிவிட்டது.

மகேந்திரத்தார் சிலையாக இருந்தார். அவர் எதுவும் கூறவில்லை. நிலத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். அவர் எதிர்பாரக்காத செய்திதான். ஆரண்யாவும் ஆதித்யாவும் தகப்பனுக்கருகில் சென்று ஆதரவாக நின்று கொண்டனர். ஆதித்யா தகப்பனின் தலையை மெதுவாகத் தடவி விட்டுக் கொண்டாள். அவளின் கைகளைப் பற்றிக்கொண்ட மகேந்திரம் மெதுவாக அழுதார்.

அங்கிருந்த எல்லோர் கண்களிலும் கண்ணீர் துளிர்த்தது.

" அவ ஒண்டும் வருத்தமாயும் இருக்கேல்லை. சும்மா அடிக்கடி வயித்துக்குள்ளை நோகுதென்று சொல்லிறவ." என்று சொல்லும்போது அவர் குரல் தளதளத்தது.

ஒரு இலக்கத்தை ஆதியிடம் கொடுத்து " இந்த நம்பருக்கு போன் பண்ணம்மா என்றார்.

ஆதியும் போன் பண்ண மறுகரையில் மகேந்தித்தாரின் தம்பி நாகேந்திரம்தான் எடுத்தார். எடுத்தவுடன் அவர் அழத் தொடங்கியிட்டார் ஆதித்யா போனை தகப்பனின் கையில் கொடுத்துவிட்டு ஒதுங்கிக் கொண்டாள்.

மறுபக்கத்தில் அழுகைக்குரல் கேட்டுக் கொண்டிரந்தது.

"சரி இப்ப அழுகையை விட்டிட்டு நடந்ததைச் சொல்லு." என்று அவர் கூறிய தோரணை ஆதிக்கு வியப்பாகவே இருந்தது. தகப்பனும் சேர்ந்து



அழப்போகிறார் என்றே அவள் நினைத்தாள் ஆனால் நடந்ததோ வேறாக இருந்தது.

"இப்ப நீ என்ன கொழும்பிலையே நிற்கிறாய்."

ஆதி பக்கத்தில் வந்து ஸ்பிக்கரைத் தட்டிவிட்டாள்.

"முதலிலை அவ வயித்துக்குள்ளை குத்துது என்றுதான் சொன்னவ. அங்க வவுனியாவிலை கொண்டுபோய்க் காட்ட ஏதோ மருந்து குடுத்தவங்கள். அது குறையேல்லை. இன்னும் கூடத்தொடங்கியிட்டுது. திரும்பக் கொண்டுபோக கொழும்புக்குக் கொண்டு போகச் சொல்லியிட்டாங்கள். உடன கொண்டுவந்திட்டன் இஞ்ச நவலோகாவுக்குத்தான் கொண்டு வந்தனான். இவங்கள் அவவின்ரை வயித்துக்குள்ளை ஏதோ கட்டி இருக்குதெண்டு ஒப்பறேசன் செய்யவேணு மெண்டவங்கள். அதுக்கும் நான் ஓமெண்டு சொல்லி ஒப்பறேசனும் நடந்து முடிஞ்சு கொஞ்ச நேரத்திலை திடீரெண்டு வலிவந்து அவ போயிட்டா. " என்று சொல்லி அழத்தொடங்கிவிட்டார்.

"சரி சரி அழவேண்டாம். வரவேண்டியது வந்தே தீரும். இனி வரவேண்டியதைப்பார். காசு கையிலை வைச்சிருக்கிறியே." என்று கேட்டார்.

இத்தனைக்கும் எல்லாரும் மகேந்திரத்தாரையும் நாகேந்திரத்தாரையும் கவனித்தார்களெ யொழிய மதிவதனியைப்பற்றிச் சிந்திக்கவேயில்லை.

விசும்பல் சத்தம் அறைக்குள் வரத்தான் எல்லோரும் திடுக்கிட்டனர்.

நாகேந்திரத்தின் மனைவி மதிவதனியின் கூடப்பிறந்த சகோதரி என்பதை அறவே யாரும் சிந்திக்கவில்லை. ஆரணி அறைக்குள் ஓடிப்போக அவளைத் தொடர்ந்து மற்றவர்களும் ஓடிப்பானார்கள். அறைக்குள் மதிவதனி விக்கிவிக்கி அழுது கொண்டிருந்தாள்.

ரெலிபோனை எடுத்த ஆதி காரியத்தில் இறங்கினாள்.



"சித்தப்பா நான் ஆதித்யா கதைக்கிறன். உங்களுக்குக் காசு அனுப்பிறதெண்டால் எப்பிடி அனுப்பிறது."

"என்ரை எக்கவுண்டுக்கு கொஞ்சக்காசு அனுப்பி வையம்மா." என்று கூறிவிட்டு தன்னுடைய விபரங்களைக் கொடுக்க அவற்றைக் குறித்தக் கொண்ட ஆதி உடனே காரை எடுத்துக் கொண்டு வங்கியை நோக்கிச் சென்றாள்.

இங்கே வீட்டில் மதிவதனியை யாராலும் தேற்ற முடியவில்லை. ஓவென்று அழுது கொண்டிருந்தாள்.

கூடப்பிறந்த இரத்தம் அல்லவா.

"அவ அழட்டும் விடுங்கோ. அழுகை ஒண்டாலைதான் துயரம் முழுவதையும் வெளியெ கொட்டமுடியும்." என்று மகேந்திரம்கூறினார்.

வீடு ஒரே சோகமயமாக இருந்தது.

(இன்னும் வரும்)

# சிங்கள வெறித் தீயை வெறியர்களுக்கு எதிராகவே திருப்புவது எப்படி?



இ.பு.ஞானப்பிரகாசன்

புத்தன் நிறுவிய சமயம் (religion) மீண்டும் இரத்தம் கேட்கத் தொடங்கிவிட்டது!

இலங்கையில் இசுலாமியத் தமிழர்களுக்கு எதிராக மீண்டும் ஒரு கோரத் தாக்குதலை நிகழ்த்தியிருக்கிறது சிங்கள இன, புத்த சமய வெறி! வழக்கம் போலவே, பச்சைக் குழந்தைகளைக் கூட விட்டு வைக்காமல் சிங்களர்கள் நிகழ்த்தியிருக்கும் இந்தக் கொடூர வெறியாட்டம் பார்க்கவே பதைபதைக்க வைக்கிறது!

இலங்கை மண் இசுலாமியத் தமிழர்களின் குருதி சுவைப்பது இது முதல்முறை இல்லை. இதற்கு முன்பும் 1915ஆம் ஆண்டு இதே போலொரு சூன் மாதத்தில் முசுலீம் மக்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் மக்களைச் சிறுபான்மையினராக ஆக்குவதற்காக அதன் ஆட்சியாளர்களும் புத்தத் துறவிகளும் செய்யாத சூழ்ச்சிகள் இல்லை.

முதலில், தமிழ்நாட்டிலிருந்து அங்கே குடியேறி தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்த, அந்த மண்ணை வளம் கொழிக்கும் பகுதியாக ஆக்கிய மலையகத் தமிழர்களை, அவர்களின் தாய்நிலம் அது இல்லை என்று கூறித் தமிழ்நாட்டுக்குத் திருப்பி அனுப்பினார்கள்.

பிறகு, வழிபடும் கடவுள் வெவ்வேறாக இருந்தாலும் மொழிபடும் தமிழ் ஒன்றே என்ற உணர்வோடு ஒற்றுமையாய் வாழ்ந்து வந்த தமிழர்களைச் சமயத்தின் பேரால் பிளவுபடுத்தி, இசுலாமியர்களையும் மற்ற சமயங்களைச் சேர்ந்த தமிழர்களையும் பிரித்தார்கள். தமிழர்கள் தங்களுக்குள்ளேயே அடித்துக் கொள்ளவும் வைத்தார்கள்.

இப்பொழுது, எதற்காக இந்தப் பிரிவினைகளையெல்லாம் செய்தார்களோ, அந்த நோக்கத்தின் ஒரு பகுதி நிறைவேறி விட்டது. பல்வேறு வழிகளில் முயன்று, கடைசியில் இனப்படுகொலைத் தாண்டவம் ஒன்றையே நடத்தி இசுலாமியரல்லாத தமிழர்கள் அனைவரையும் அழித்து ஒழித்தாகி விட்டது. இப்பொழுது மிச்சம் இருப்பது இசுலாமியத் தமிழர்கள் மட்டும்தான். இனி அவர்கள் மட்டும் சிங்களர்களுக்கு எதற்காக? ஆகவே, அவர்களையும் தீர்த்துக்கட்டி விட்டு முழுக்க முழுக்க சிங்கள இன, புத்த சமயத் தனிப்பெரும் நாடாக இலங்கையைத் திகழச் (!) செய்வதற்கான அடுத்தக்கட்ட முயற்சியாகவே இந்தத் தாக்குதலை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது! இறுதியில் இதுவும் ஒரு பெரிய இனப்படுகொலையில் முடிந்தாலும் வியப்படைய எதுவுமே இல்லை.

மேலும், இசுலாமியரல்லாத தமிழர்களின் மீதான இலங்கையின் தாக்குதல்கள் இந்துக்கள்

மீதான வன்முறை என அண்மைக்காலமாக முன்வைக்கப்படுவதாலும், இந்தியாவில் இந்து சமயக் கட்சியின் ஆட்சி நடப்பதாலும் இப்பொழுதுக்கு இந்துத் தமிழர்களின் மீதான தாக்குதலைக் கொஞ்சம் நிறுத்தி வைத்துவிட்டு, வெகுகாலமாக ஏறுமுகத்திலேயே இருக்கிற இசுலாமியத் தமிழர்களின் எண்ணிக்கையைக் கொஞ்சம் குறைக்கலாமே என்கிற எண்ணமாகவும் இது தென்படுகிறது.

எது எப்படியிருந்தாலும், இலங்கையின் இன, சமய வெறியானது சிங்கள புத்தர்களைத் தவிர வேறு யாரையும் அந்த மண்ணில் வாழ விடாது என்பதே இந்தத் தாக்குதல் மூலம் நாம் உணர வேண்டிய உண்மை! இதை உணர்த்த வேண்டியதும், இந்தக் கொடுமைக்குக் கண்டனம் தெரிவிப்பதோடு நிறுத்திக் கொள்ளாமல் இந்த இனசமய வெறித் தீயைச் சிங்களர்களுக்கு எதிராகவே திருப்பிவிடுவதற்கான அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதும் தமிழினத் தலைவர்களின் முதற்பெரும் கடமை!

தமிழினத் தலைவர்கள் செய்ய வேண்டியது என்ன?

இந்துத் தமிழர்கள் மட்டும்தான் தங்கள் பகைவர்கள் என்பது போலவும், இசுலாமியத் தமிழர்கள் தங்கள் நண்பர்கள் என்றும் இலங்கை இத்தனை ஆண்டுகளாக நடத்தி வந்த உலகின் மிக நீளமான நாடகம், இதோ முடிவுக்கு வந்து விட்டது. இந்துக்களோ, கிறித்தவர்களோ, இசுலாமியர்களோ, தமிழ் பேசும் யாராக இருந்தாலும் சிங்களர்கள் கண்ணுக்கு அவர்கள் தமிழர்கள்தாம் என்பது வெட்டவெளிச்சமாகி விட்டது! இந்த நேரத்தில், இசுலாமியத் தமிழ்த் தலைவர்களைச் சந்தித்து இது பற்றிப் பேச வேண்டியது தமிழீழ ஆதரவுத் தலைவர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடமை!

இனியாவது சமயக் கண்ணோட்டத்தில் பிரிந்து நிற்காமல், இன அடிப்படையில் ஒன்றுபட்டு ஒரே சமூகமாகத் தமிழர்கள் திரள வேண்டும் எனவும், அப்படி ஒற்றுமையாக நின்றால்தான் சிங்கள புத்தத்துக்கு எதிராக அந்த மண்ணில் மற்ற சமய, இன மக்கள் வாழ முடியும் என்பதையும் ஈழ உணர்வுத் தலைவர்கள் இசுலாமியத் தமிழினத் தலைவர்களைச் சந்தித்து எடுத்துரைக்க வேண்டும்!

"தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழர்கள் – இதுதான் 'தமிழர்' என்பதற்கான வரையறை. இதில் இந்து, இசுலாம், கிறித்துவம், ஏன் புத்தம் உட்பட எந்தச் சமய வேறுபாட்டுக்கும் இடமில்லை. எனவே, 'தனித் தமிழீழம்' என்பது இந்துத் தமிழர்கள் என்னும் குறிப்பிட்ட சில மக்களுக்கோ, விடுதலைப்புலிகள் என்கிற ஓர் அமைப்புக்கோ, பிரபாகரன் என்கிற தனியொரு மனிதருக்கோ உரித்தானதில்லை. அது தமிழர்கள் அனைவருக்குமானது! தமிழர் அனைவரின் பாதுகாப்புக்கானது! எனவே, இசுலாமியத் தமிழர்களும் இனி தனி ஈழத்தை ஆதரிப்பதோடு, அதற்கான போராட்டங்களில் இறங்குவதோடு, அதன் அடிப்படையில் தங்கள் அரசியல் நிலைப்பாடுகளை அமைத்துக் கொள்ளவும், தனித் தமிழீழத்துக்கு ஆதரவளிக்க இசுலாமிய நாடுகளுக்கு அழுத்தம் கொடுக்கவும் முன் வரவேண்டும்" என ஈழ ஆதரவுத் தலைவர்கள் இசுலாமியத் தமிழ்த் தலைவர்களிடம் வலியுறுத்த வேண்டும்!

இது மட்டுமில்லை, கருணாநிதி, எம்.ஜி.ஆர் முதலான முன்னாள் தமிழினத் தலைவர்கள் செய்யத் தவறிய கடமை ஒன்றும் இருக்கிறது. அதைக் கையிலெடுக்கவும் இதுவே சரியான நேரம்!

ஈழத்தில் நடக்கும் கொடுமைகள் அனைத்துக்கும் –ஆம் அனைத்துக்கும்– மூல காரணமாக இருப்பவர்கள் அந்நாட்டு புத்த குருமார்கள். இலங்கை ஆட்சியாளர்களைப் பின்னின்று இயக்குபவர்களும் அவர்கள்தாம். ஆக, அவர்கள் கொட்டத்தை அடக்கினாலே தமிழர்களுக்கு எதிரான எல்லா நடவடிக்கைகளும் ஓயும்; தனி ஈழமும் கிடைக்கும்.

அதற்கு ஒரே வழி! இலங்கை புத்த குருமார்களும், துறவிகளும் புத்த சமயத்திலிருந்தே விலக்கப்பட வேண்டும்!

இது நடக்குமா? கண்டிப்பாக நடக்கும்!

'ஊறு செய்யாமை' என்பதுதான் புத்த சமயத்தின் அடிப்படைக் கொள்கையே. ஆனால், இலங்கையில் உள்ள புத்த குருமார்களுக்கும் இதற்கும் அணுவளவாவது தொடர்பு இருக்கிறதா?

சிங்களர்களின் கதாநாயகனாகவும், அந்நாட்டு புத்த சமயத்தின் புதிய தலைமுறைக் காவலனாகவும் இன்று வரை போற்றப்படுகிற அனகாரிக தர்மபால "தமிழ் மக்களைக் கடலுக்குள் தள்ளிக் கொல்ல வேண்டும்" என்று கூசாமல் சொன்னவன். இதோ, இப்பொழுது நடந்த தமிழர்களுக்கு எதிரான இந்த இரத்தவெறியாட்டத்தைத் தூண்டி விட்டவனும்

இலங்கையின் புத்தத் துறவி ஒருவன்தான். வெளிப்படையாகவே அவர்கள் தமிழ் மக்களைக் கொல்லச் சிங்களர்களைத் தூண்டுகிறார்கள். தூண்டுவது மட்டுமா? தாங்களே களத்தில் இறங்கி மக்களைக் கொலை செய்யவும் அவர்கள் தயங்குவதில்லை. அவ்வளவு ஏன், இலங்கையின் முன்னாள் அதிபன் பண்டாரநாயகவைக் கொன்றவனே புத்தத் துறவி ஒருவன்தானே?

காலம் காலமாக, இப்படிக் கொல்வதையும் கொலை செய்யத் தூண்டுவதையுமே முழு நேரத் தொழிலாகக் கொண்டிருக்கும் இலங்கையின் புத்த குருமார்கள் எப்படிப் புத்தர்களாக இருக்க முடியும்? புத்த சமயம் இவர்களை எப்படி புத்தர்களாக ஏற்கலாம்?

எனவே, இலங்கையின் புத்த குருமார்களையும், இலங்கையில் கடைப்பிடிக்கப்படும் சிங்கள புத்த முறையையும் புத்த சமயத்திலிருந்தே விலக்குவதாக அறிவிக்குமாறு தமிழ்த் தலைவர்கள் தலாய் லாமாவைச் சந்தித்து வலியுறுத்த வேண்டும்!

ஆடு மாடு போன்ற உயிரினங்களைக் கொல்வதையே பெரும் பாவம் எனக் கூறும் புத்த சமயம் இனப்படுகொலைகளைத் தூண்டும் சிங்கள புத்தர்களை எப்படிப் புத்தர்களாக ஏற்கலாம் எனத் தலாய் லாமாவிடம் நம் தலைவர்கள் கேள்வி எழுப்ப வேண்டும்!

"ஊறு செய்யாமை எனும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட புத்த சமயத்தைச் சார்ந்த நீங்கள், இப்படித் தமிழர்களுக்கு எதிராகச் செயல்படுவது நியாயமா" என்று கேட்டதற்கு, "புத்த சமயத்தைச் சேர்ந்தவர்கள் என்கிற முறையில் அது தவறுதான். ஆனால், சிங்களர்கள் எனும் முறையில் நாங்கள் அப்படித்தான் நடந்து கொள்வோம்" என்று புத்தத் துறவி ஒருவர் பன்னாட்டு ஊடகம் ஒன்றுக்கு நேர்காணல் அளித்திருப்பதைத் தமிழர் தலைவர்கள் தலாய் லாமாவுக்குச் சுட்டிக்காட்ட வேண்டும். இலங்கையிலுள்ள புத்த குருமார்கள் ஒருபொழுதும் புத்தர்களே இல்லை. முழுக்க முழுக்க அவர்கள் வெறும் சிங்களர்களாகத்தான் இருக்கிறார்கள், அந்த அடிப்படையில்தான் சிந்திக்கிறார்கள், நடந்து கொள்கிறார்கள் என்பதற்கு இதை விட வேறென்ன அத்தாட்சி வேண்டும் என்று தலாய் லாமாவிடம் கேட்க வேண்டும்!

தமிழர்களுக்கும் புத்த சமயத்துக்கும் இடையிலான உறவு சிங்களத்துக்கும் புத்த சமயத்துக்குமான உறவை விடப் பன்மடங்கு நெருக்கமானது, பழமையானது. சோழ அரசர்களுள் ஒருவரான சிபிச் சக்கரவர்த்தி புத்தபிரானின் திருப்பிறவிகளுள் (அவதாரம்) ஒருவராகப் போற்றப்படுகிறார். புத்த சமயத்தின் இருபெரும் பிரிவுகளுள் ஒன்றான 'மகாயான புத்த'த்தை நிறுவியவரே பல்லவ அரசத் தலைமுறையைச் சேர்ந்த தமிழரான போதிதர்மர்தான் என்பது வரலாறு. புத்த சமயத்தின் ஈடு இணையற்ற புனிதத் தலமாகக் கருதப்படும் 'ஷாவலின் கோயிலை' நிறுவியரும் அவர்தான். இராஜராஜ சோழர், அவர் தந்தை சுந்தர சோழர் ஆகியோர் முறையே இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் புத்த சமயம் வளரப் பெரும் செல்வங்களை வாரி இறைத்திருக்கிறார்கள் என்பதைக் கல்வெட்டுகள் காட்டுகின்றன. தமிழினத் தலைவர்கள் இவற்றையெல்லாம் எடுத்துக் கூறி, இந்த அளவுக்குப் புத்த சமயத்துக்குத் தன்னிகரற்ற சேவைகளை புரிந்திருக்கும் தமிழர்களை அதே புத்த சமயத்தின் பெயரால் சிங்களர்கள் அழித்தொழிப்பதும், அதை புத்த சமயத் தலைமையும் கைகட்டி வேடிக்கை பார்ப்பதும் நியாயமா என்று தலாய் லாமா நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும்படியாகக் கேட்க வேண்டும்!

எல்லாவற்றுக்கும் மேலாக, "பிற உயிர்களுக்குச் சிறு துன்பம் கூட விளைவிக்கக் கூடாது" என்று கூறிய புத்தரின் பெயராலேயே கூட்டம் கூட்டமாக மக்களைக் கொன்று குவிக்கிற, புத்த சமயத்துக்குக் களங்கம் ஏற்படுத்தும் வகையில், தமிழர்களைக் கொல்லும்படி புத்த சமயத்தின் பெயராலேயே மக்களைத் தூண்டுகிற, புத்த குருமார்களுக்கே உரிய புனித ஆடையை அணிந்துகொண்டே உயிர்க்கொலை நிகழ்த்துகிற அந்தக் குருதிக்கறை படிந்த சிங்கள புத்த குருமார்களுக்கு புத்தபெருமானின் புனிதப் பல்லைப் பாதுகாக்கும் அருகதை இன்னும் இருக்கிறதா என்றும் தலாய் லாமாவிடம் நம் தமிழ்த் தலைவர்கள் வலுவாகக் கேள்வி எழுப்ப வேண்டும்!

ஆகவே, இந்த அளவுக்குப் புத்த சமயத்துக்கு நெடுங்காலமாகத் தொடர்ந்து இழுக்கு ஏற்படுத்தி வருகிற இலங்கைப் புத்த குருமார்களையும் அவர்களைச் சேர்ந்தவர்களையும் புத்த சமயத்திலிருந்தே விலக்குவதாகவும், இவை அனைத்துக்கும் ஒத்துழைக்கிற இலங்கை புத்த நாடே இல்லை புத்த சமயத்துக்கும் கொள்கைக்கும் எதிரான நாடு எனவும், அந்நாட்டில் இனியும் புத்தபிரானின் புனிதப் பல் இருப்பது அந்தப் பெருமானுக்கு இழுக்கு எனவும், அதைத் திபெத்

போன்ற வேறு ஏதாவது நாட்டுக்கு இடமாற்ற வேண்டும் எனவும் அறிவிக்குமாறு தலாய் லாமாவிடம் தமிழர் தலைவர்கள் உறுதியாக வலியுறுத்த வேண்டும்!

எனவே, தமிழினத் தலைவர்களே!

பிரிந்து கிடக்கும் இனத்தை ஒன்றுபடுத்த,

இலங்கைப் புத்த வெறியர்களின் கொட்டத்தை ஒடுக்க,

தமிழீழத்துக்கு ஆதரவாகவும் இலங்கைக்கு எதிராகவும் உலக சமுதாயத்தை அணி வகுக்கச் செய்ய

நமக்குக் கிடைத்திருக்கும் இந்த அயனான வாய்ப்பை நழுவ விட்டு விடாதீர்கள்!

இசுலாமியத் தமிழர்கள் மீதான இந்த வன்முறைத் தீயை சிங்கள புத்த வெறியர்களுக்கு எதிராகவே திருப்ப முன்வாருங்கள்!

முதல் அடியை நீங்கள் வையுங்கள்!

முழு இனமும் உங்கள் பின்னால்!

# உலக சைவப் பேரவையின் பிரித்தானியக் கிளை நடத்திய சைவ சமயத் தேர்வின் பரிசளிப்பு விழா 2014

உலக சைவப் பேரவையின் பிரித்தானியக் கிளை வருடம் தோறும் நடத்திவரும் சிறுவர்களுக்கான சைவ சமயத் தேர்வு 6வது வருமாக கடந்த 03.05.2014 அன்று நடைபெற்றது. இப்பரிட்சை கிரின் போட் சைவமுன்னேற்றச் சங்கம் லூசியம் சிவன் கோயில் சட்டன் ஆகிய இடங்களில் நடைபெற்றது. இச்சை சமயத் தேர்வில் சித்தியடையும் மாணவர்களுக்கு கடந்த காலங்களின் ஒரு இடத்தின் மாத்திரம் சான்றிதழ்களும், பரிசுகளும் வழங்கப்பட்டு வந்தன இவ்வருடம் மாணவர்களின் வசதிக்கேற்ப நான்கு இடங்களில் பரிசளிப்பு விழாவை நடத்தினோம் 31.05.014 சனிக்கிழமை மாலை 6மணிக்கு இப்பேட்டில் உள்ள செல்வ விநாயகர் ஆலய மண்டபத்திலும் 14.06.2014 சனிக்கிழமை 4 மணிக்கு ஈலிங் கனக துர்க்கை அம்மன் கோயில் மண்டபத்திலும் 21.06.2014 சனிக்கிழமை காலை 11 மணிக்கு லண்டன் லூசியம் சிவன் கோயில் மண்டபத்திலும் றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன.

அடுத்த வருடப்பரீட்சை மார்ச் மாத நடுப்பகுதியில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்படுகின்றது. இப்பரீட்சையில் பங்குபெற விரும்பும் மாணவர்கள் உங்கள் அருகில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளில் தொடர்பு ொண்டு விண்ணப்பப் படிவங்களை இவ்வருட நவம்பர் மாதத்தில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

உலக சைவப் பேரவை சைவ சமய வளர்ச்சிக்கு பாடுபட்டு வருகின்றது. சிறப்பாக சிறுவர்களுக்கு இளம் வயதிலேயே சைவ சமயத்தை ஊட்டவோண்டும் என்றபதற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறு முக நாவலரின் சைவ வினாவிடை நூலைப் பின்பற்றி கேள்வி வினாக்கள் அடங்கிய சைவ சமயத் தேர்வு என்னும் நூலை வெளியிட்டுள்ளது இந்நூலின் அடிப்படையில் தேர்வும் நத்திவருகின்றது. இத்தேர்வு 6 வயதிற்கு உட்பட்டவர்களுக்கும் 8வயதுக்கு உட்பட்டவர்களுக்கும் வாய் மூலம் வினாவிடை கேட்டு பரிசுகள் வழங்கியும், 8 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வயதுக்கட்டுப்பாடின்றி தரம் 1 முதல் 8வரையிலான எழுத்துப் பரீட்சையையும் நடத்தி வருகின்றது.

அன்பார்ந்த சைவப் பெற்றோர்களே நீங்கள் இதில் கவனமெடுத்து உங்கள் பிள்ளைகளுக்கு சைவ சமய அறிவு வளர்க்க முன்வருமாறு உலக சைவப்பேரவை உங்களை அன்பா கேட்டுக் கொள்கின்றது.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

சிவநெறிச்செல்வர்.
**மனோகரன்**
தலைவர். உலக சைவப் பேரவை
பிரித்தானியக்கிளை



நுணாவிலூர் **கா. விசயரத்தினம்**

# மண்ணின் மகிமையும் அதன் வாசனையும்

பரந்து விரிந்த எல்லை கடந்த வெட்ட வெளியான வானத்தில் ஒரு சூரிய குடும்பம் அந்தரத்தில் மிதந்து ஊர்ந்த வண்ணமுள்ளது. அதன்கண் புதன், சுக்கிரன், பூமி, செவ்வாய், வியாழன், சனி, விண்மம், சேண்மம், சேணாகம் ஆகிய ஒன்பது கோள்களும் அடங்கும். சூரியன் சுமார் 456 கோடி 80 இலட்சம் (456,80,00,000) ஆண்டுகளுக்குமுன் தோன்றினான் என்பது விஞ்ஞானிகளின் கணிப்பாகும். சூரியன், நட்சத்திரங்கள், ஒன்பது கோள்கள் ஆகிய ஒவ்வொன்றின் ஈர்ப்புச் சக்தியால் இவைகள் வானில் தரித்து நிற்கின்றன.

**எம் மண்ணாகிய பூமி**

இற்றைக்கு சுமார் 454 கோடி (454,00,00,000) ஆண்டுகளுக்குமுன் இயற்கை மாற்றத்தால் சூரியன் வெடித்த பொழுது நாம் வாழும் பூமியானது சூரியனிலிருந்து தெறித்துச் சூரியனைப்போல் எரிந்து கொண்டிருந்தது. நீண்ட காலத்தின்பின் பூமியின் மேற்பரப்பு குளிர்ச்சியடைந்தது. ஆனால் பூமியின் மையப் பகுதி இன்றும் எரிந்த வண்ணம் உள்ளது. இன்றைய ஆய்வின்படி இந்த ஒன்பது கோள்களில் பூமி ஒன்றில் மட்டும்தான் உயிரினங்கள் வாழக் கூடிய காற்று, நீர், வெப்பம் ஆகியவை உள்ளன. எனவே மற்றைய எட்டுக் கோள்களிலும் உயிர் வாழ முடியாது. இந்தவகையில் மற்றைய கோள்களிலும் பார்க்கப் பூமி பல இயற்கை அற்புதங்கள் நிறைந்து அதி சிறப்புற்று விளங்குகின்றது. பூமியைத் தோண்டத் தோண்ட வற்றாக் கனிமப்பொருள்கள் பொதிந்திருப்பதைக் காண்கின்றோம். பூமியின் 71 சத வீதப் பகுதி உப்பு நீர் கொண்ட கடலால் மூடப்பட்டுள்ளது.

அதி ஆற்றலுடைய வேதியியல் தன்னைத்தானே பெருக்கக் கூடிய மிகச் சிறிய உயிரினமான அணுத்திரண்மத்தை சுமார் 400 கோடி (400,00,00,000) ஆண்டுகளுக்குமுன் பூமியில் முதன்முதலாகத் தோற்றுவித்து உயிர் மலர்ச்சி முறையை ஆரம்பித்ததாக நம்பப்படுகின்றது.

**நிலக்கரி**

பூமியின் மேற்புறத்திலிருந்து 1,800 மைல் (2,880 கி.மீ) ஆழத்தில் கற்பாறைகள் உருகி மலைக் குழம்பான நிலையில் காணப்படுகின்றது. இவை சில சமயங்களில் பூமித் தரையைப் பீறிக்கொண்டு பூகம்பமாகவும், எரிமலையாகவும் சீறிப் பாய்ந்து உயிரினங்களையும், நாட்டையும் அழித்து விடுகின்றன. சதுப்பு நிலங்களிலும் பள்ளப் பகுதிகளிலும் வளர்ந்த மரங்;களும், அடர்ந்த காடுகளும் காலப் போக்கில் இயற்கை அனர்த்தங்களால் மண்ணில் புதைக்கப்பட்டு அதன் பார அழுத்தத்தால் நிலக்கரிப் பாறையாக மாறுகின்றது. நிலக்கரி உண்டாவதற்குச் சுமார் 20 கோடி (20,00,00,000) ஆண்டுகள்வரை நாம் காத்திருக்கவேண்டும்.

**பாறை எண்ணெய்**

உலகளாவிய ரீதியில் பூமியடியின் ஆழத்திலுள்ள மலைகளின் வளைமுகடுகளில் பல இலட்ச ஆண்டுகளுக்குமுன் பொறியுட்பட்ட எண்ணெய்க்கும் நிலத்திலிருந்து வெளிப்படும் வாயுவுக்கும் தேடுதல் நடாத்தப்படுகின்றது. இவ்வாறான எரிபொருள் பாரிய கைத்தொழில்களின் மூலப் பொருளாய் அமைந்துள்ளது.

நீரொழுக்கற்ற கடற் பகுதிகளின் சேறு வண்டல்களுடன் திரண்ட மிருக தாவர உறுப்புக்களிலிருந்து பாறை எண்ணெய் உருவாகின்றது. உயரிய தனித்தன்மை வாய்ந்த நுண்ணுயிரிகள் தமக்குத் தேவையான பிராணவாயுவை உறுப்புக் கழிபொருளிலிருந்து உறுஞ்சிப் பெறுகின்றன. அதனால் உறுப்புக் கழிபொருள் கொழுப்பாகவும், மெழுகாகவும் உருமாற்றம் அடைகின்றது. அவை திரண்ட வண்டல்களால் புதைபடும் பொழுது, அமுக்கமும் தட்பவெப்ப நிலையும் அதிகரித்து பாறை எண்ணெய்யாக உருமாற்றமடைகின்றது. அப்பொழுது அதனைச் சுற்றியுள்ள சேற்றுப் பகுதிகள் களிப்பாறை என்று சொல்லப்படும் பாறையாக மாறிவிடும். பாறை எண்ணெய் உருவாவதற்கு சுமார் ஒரு கோடி (1,00,00,000) ஆண்டுகள் ஆகின்றன.

**பூமியின் விட்டம்**

பூமியின் விட்டப்பாதையான 8,000 மைல்களைக் (12,800 கி.மீ) குடைந்து கொண்டு போவோமாகில் முதலில் மணல், களிமண், கூழாங்கல், நீர், மலை, வாயு, நச்சு வாயு, பெரும் பாறை, மலைக் குழம்பு, மீண்டும் பெரும் பாறை, நச்சு வாயு, வாயு, மலை, நீர், கூழாங்கல், களிமண், மணல் என்ற அமைப்பினைக் காணலாம். இவ்வாறு பூமியின் மேற்பரப்பு மணலால் மூடப்பட்டுள்ளது. நம் காலடியில் உள்ள மண் ஆனது, சிதைவுபட்ட பாறை, பதனழிவுற்ற தாவரம், மிருக உயிர் எச்சம் ஆகியவற்றின் சேர்மமாகும். இச் சேர்மத்தின் மேற் பகுதி உலக விவசாயத் தாவர வளர்ச்சிக்குப் பயன் படுத்தப்படுகிறது.

**மண்ணின் பொருள் வரையறை**

மண்ணியல் ஆய்வு, 0.0625 (1ஃ16) மில்லி மீற்ரருக்கும் 2 மில்லி மீற்ரருக்கும் இடைப்பட்ட விட்டமுள்ள வண்டல் துகள்களை 'மண'; என்று வரையறுத்துச் சொற்பொருள் விளக்கமும் தருகின்றது. பாறைத் துண்டுகள் காற்று, மழை, ஆறு ஆகியனவற்றால் உடைக்கப்பட்டு மண் என்ற நிலையடைகின்றது. மண்ணானது செடி, கொடிகளை வளர்க்கக் கூடிய நீர், சூடு, உணவு, காற்று போன்றவற்றைக் களஞ்சியப்படுத்தியும் செடி, கொடியின் வேருக்கு உறுதுணையாகவும் நின்று செயற்படுகின்றது.

வியக்கத்தக்க சிக்கலான ஒரு பொருளாய் மண் இருப்பதினால் அதை நில இயலாளர், வேதியியல் வல்லுனர், நாட்டுப்புற பொருளாதார நூலார், உயிர்நூல் அறிஞர், மண் ஆய்வாளர் ஆகியோர் ஆய்வு செய்தவண்ணம் உள்ளனர். இயற்கையின் பெரும் வியப்புக்குரிய பொருள்களில் மண்ணும் ஒன்றாயுள்ளது என்பது விஞ்ஞானிகளின் கணிப்பாகும். மண் ஒரு நிலையில் நில்லாது, நீர்க்கசிவுச் செயல், உயிரியக்கவியற் செயல் என்பன மூலமாய் மாற்றமடைந்தும் உருமலர்ச்சி பெற்றும் வருகின்றது. மழை காலங்களில் மண்ணிலுள்ள கரைபொருள்கள் கழுவப்பட்டும் கரைந்தும் மண்ணடிக்குள் சென்று விடுகின்றன.

**மண்ணின் பகுப்பு**

உலக மண்ணை (1) மணல், (2) வண்டல், (3) களிமண், (4) களிச்சேற்று வண்டல், (5) தூள்மண், (6) சுண்ணம் நிறைந்த மண் என்று ஆறு (06) பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளனர் மண்நூல் துறையார். உலக மக்கள் தாம் பிறந்த மண்ணின் தரத்தையும், செழிப்பையும் அறிந்து

அததற்கேற்ற பயிரை நாட்டி விவசாயம் செய்து உலகப் பசியைப் போக்கி வாழ்கின்றனர்.

**தொல்காப்பியம்**

இனித் தொல்காப்பியர் மண் கதை பற்றிக் கூறும் பாங்கினையும் காண்போம். திருமால் காக்கும் காடாகிய 'முல்லை' இடமும், முருகவேள் காக்கும் உயர்ந்த மலையாகிய 'குறிஞ்சி' இடமும், இந்திரன் காக்கும் நன்னீர் பொருந்திய வயலாகிய 'மருதம்' இடமும், வருணன் காக்கும் பெருமணல் பொருந்திய 'நெய்தல்' இடமும் மறையே முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்று முன்னோர்களால் கூறப்பட்ட பெயர்களாகும் என்று தொல்காப்பியச் சூத்திரம் கூறுகின்றது.

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."**
*-(பொருள் 05)*

தொல்காப்பியர் காலத்துக்குமுன் இருந்த நம் பண்டைத் தமிழர்கள் தாம் வாழ்ந்த மண்ணை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனப் பெயரிட்டு நால்வகை நிலங்களாக வகுத்துள்ளமை புலனாகின்றது. இன்னும் காலப் போக்கில் முல்லையிலும் குறிஞ்சியிலும் உள்ள சில பகுதிகள் முறைமுறை திரிந்து, நல்லியல்பு இழந்து, மழை குன்றி, வெம்மையடைந்து, தரிசுபட்ட வனாந்தர நிலத்தைப் 'பாலை' எனப் பெயரிட்டு, அதைக் காக்கக்; 'கொற்றவை' என்ற தெய்வத்தை நியமித்தனர். உதவாத தரிசு நிலமென அறிந்திருந்தும் அதற்குமொரு பெயரிட்டமை நோக்கற்பாலது.

நால்வகையாய் அமைந்த நிலங்கள,; பாலை நிலத்துடன் ஐவகை நிலங்களாகவும், ஐந்திணைகளாகவும் பெயர் பெற்றன. இவ்வண்ணம் 'பாலை' பிறந்த கதையைச் சிலப்பதிகாரம் கூறும் பாங்கிது.

**"முல்லையும், குறிஞ்சியும், முறைமையின் திரிந்து**
**நல் இயல்பு இழந்து, நடுங்கு துயர் உறுத்துப்,**
**பாலை என்பது ஓர் படிவம் கொள்ளும்."**
*(காடுகாண் காதை. 64 66)*

காடும் காடுசார்ந்த நிலத்தை முல்லை என்றும், மலையும் மலைசார்ந்த இடத்தை குறிஞ்சி என்றும், வனாந்தரமும் அதனைச் சார்ந்த இடத்தை பாலை என்றும், வயலும் வயல்சார்ந்த இடத்தை மருதம் என்றும், கடலும் கடல்சார்ந்த இடத்தை நெய்தல் என்றும் மேற்கண்டோம். இந் நிலங்களின் தன்மையை அறிந்த மக்கள் முல்லையில் காத்து இருத்தலும், குறிஞ்சியில் புணர்தலும், பாலையில் பிரிதலும், மருதத்தில் ஊடலும், நெய்தலில் இரங்கலும் நிகழ்த்தித் தம் வாழ்வியலைச் சீரும் சிறப்புடனும் நடாத்தி இன்புற்று வாழ்ந்தனர்.

**தமிழ் இலக்கியங்கள்**

இன்னும் மண்ணின் மகிமை பற்றித் தமிழ் இலக்கியங்களான புறநானூற்றில் நிலம் பெயரினும், நிலம்புடை, மலர்தலை உலகம், நாடா கொன்றோ, நிலனே, ஊரே என்றும், அகநானூற்றில் மண்கண், தருமணல், இடுமணல் என்றும், பரிபாடலில் பருமணல், மண்மிசை, நிலன் என்றும், பதிற்றுப்பத்தில் நிலம், மண்ணுடை என்றும், ஐங்குறு நூற்றில் வெண்மணல், நுண்மணல், வார்மணல், நெடுமணல் என்றும், நற்றிணையில் தருமணல், நிலம், நிலந்தாழ் என்றும், மணிமேகலையில் நிலாமணல், நெடுமணல் குன்றம், இடுமணல் என்றும், குறுந்தொகையில் நிலத்தினும் என்றும், திருக்குறளில் நிலம், மண்ணோடு, நிலத்தியல்பால் என்றும், கலித்தொகையில் நிலம்பூத்த, மண்கடல், மணல் நோக்கி என்றும் பற்பல கோணங்களில் நின்று பேசப்படும் பாங்கினைக் காண்கின்றோம்.

**இந்திரனைச் சூழ்ந்த பழி**

ஒரு சமயம் இந்திரன் பல பாவச் செயல்களைப் புரிந்துவிட்டான். அதனால் ஏற்பட்ட பழி பாவங்கள் அவனைச் சுற்றிச் சூழ்ந்து கொள்ள அவன் செயற்பாடுகள் தடைப்பட்டன. இதனால் கவலை கொண்ட இந்திரன் தன் பழி பாவங்களைப் போக்க மரத்தையும், மண்ணையும், பெண்ணையும் நாடிச் சென்று உதவி கேட்டு நின்றான். முதலில் மரத்திடம் போய் தன் பழி பாவங்களை மரத்திலிருந்து பாலாகவும், பிசினாகவும் கழிக்குமாறும,; அதற்காக மரங்களை வெட்ட வெட்டத் தழைக்கும் வரம் தருவதாகக் கூற, மரங்களும் அதற்கு உடன்பட்டன. இரண்டாவதாக மண்ணிடம் போய் தன் பாவத்தை மனிதர் மண்மேற் போடும் கழிவுப் பொருள் மூலம் கழிக்கும் படியும்

அதற்காக மண்மேற் போடப்பட்ட கழிவுப் பொருள்கள் தானே உக்கி மண்ணுக்கு எருவாய் மாறும் வரத்தையும், மண்ணை அகழ்ந்து விட்ட பொழுது அது தானாகவே மூடும் வரத்;தையும் தருவதாகவும் கூற, மண்ணும் அதற்கு ஒத்துக்கொண்டது. மூன்றாவதாக இந்திரன் பெண்ணை நாடிச் சென்று, தன் பழி பாவங்களைப் பெண்களின் மாத விடாய் மூலம் கழிக்குமாறும், இதற்காக அவர்கள் கருவுற்றிருக்கும் காலத்திலும் தம் கணவருடன் மருவி வாழலாம் என்ற வரம் தருவதாகக் கூற, அவர்களும் புன்முறுவலுடன் ஒத்துக் கொண்டனர். இவ் வரத்தால் பெண்களின் வாழ்வியல் பெருகிக் குடும்ப மகிழ்வும் பெறுகின்றனர். இங்கே மண்ணின் மகிமையையும் அதன் வாசனையையும் காண்கின்றோம். அதே நேரத்தில் இந்திரனைச் சூழ்ந்த பழி பாவங்களும் நீங்கித் தன் செங்கோல் ஆட்சியைத் திறம்பட நடாத்தத் தொடங்கினானென்பது ஓர் ஐதிக வழிவழிச் செய்தியாகும்.

**மண்ணின் செயற்பாடு**

மக்கள் தமக்கு வேண்டாக் கழிவுப் பொருட்களையும், இறந்துபடும் மிருக மனித உடலங்களையும், மனித மிருக எச்சங்களையும், வெட்டி எறியும் மரம,; செடி, கொடிகளையும் மண்மேற் போட்டும், மண்ணை அகழ்ந்து புதைத்தும் விடுகின்றனர். இதை மண் ஏற்றுக் கொண்டு அவற்றைச் சீரணித்துப் பசளையாக்கித் தன்னை வளப்படுத்தித் தன்மேல் வளரும் மரம், செடி, கொடி, பயிர்களுக்கு உணவாக்கி அவற்றின் விளைச்சலை அதிகரிக்கச் செய்து, உலகிலுள்ள சுமார் 700 கோடி மக்களுக்கும் உணவளித்து, பசிக் கொடுமை தணித்து, உயிர் கொடுத்தும், மற்றைய உலகச் சீவராசிகள் அனைத்திற்கும் உணவளித்துக் காத்துச் சுமார் கடந்த 400 கோடி (400,00,00,000) ஆண்டுகளாக இத் தொடர்ச் செயலைப் புரிந்தவண்ணம் உள்ளது. இதனால் மக்கள் மண்ணைத் தம் உயிரினும் மேலாக நேசிக்கின்றனர்.

**சேமப் பெட்டி**

தீ, காற்று, நீர் போன்ற இயற்கை அனர்த்;தங்களிலிருந்தும், கள்வர்களிடமிருந்தும் தமது பொருள்களான பணம், பொன், அணிகலன்கள், செல்வம், முக்கிய ஆவணங்கள், பத்திரங்கள் ஆகியவற்றைக் காப்பாற்றுவதற்காக இவற்றை மண்ணில் புதைத்துப் பின் வேண்டிய நேரத்தில் எடுத்துப் பாவிக்கின்றனர். சில நாட்டார் தம் நாட்டின் வரலாற்றுப் பொக்கிசங்களைப் பேழையில் வைத்து மண்ணில் மிக ஆழத்தில் புதைத்து விடுகின்றனர். இவை மண்ணில் மறைந்து ஆயிரமாயிரம் ஆண்டுகள் சென்றாலும் மங்காது சேமப் பெட்டியில் வைத்ததுபோல் சேமித்துக் காப்பாற்றப்படுகின்றன.

நம் கிராமியப் பெண்கள் சமயலறையின் அடுப்பங்கரையைத் தோண்டித் தம் நகைகளையும், பணத்தையும் அதில் வைத்து மண்ணால் மூடி, அதை மெழுகி, அதன்மேல் அடுப்புகளை வைத்துச் சமையல் செய்வர். இன்னும் குடங்கரையிலும் இவற்றைப் புதைத்துக் காப்பாற்றி வருகின்றனர். இவ்வாறான அடுப்பங்கரையும், குடங்கரையும் சமசியப்படாத இடங்களாகும். இம் மண்ணின் பெருமையை அந்த மக்கள்தான் நன்கு அறிவர்.

**முடிவுரை**

பூமியின் மேற்பரப்பில் அமைந்த மண்தான் பூமியின் உயிர். அம் மண்தான் மனிதனின் உயிர். மனிதன் மண்ணில் பிறந்து, உருண்டு, பிரண்டு, தவழ்ந்து, எழுந்து, விழுந்து, நடந்து, ஓடி விளையாடி, எழுதிப் படித்து, கொத்தி, உழுது, பயிரிட்டு, விவசாயம் செய்து, படுத்து, உறங்கி, பகல் இரவென்று பாராது தம் வாழ்நாள் முழுவதையும் மண்ணுடன் ஒட்டி உறவாடிப் பிறந்த அதே மண்ணில் மடிந்து மண்ணாகிப் போகின்றான். எந்த மண்ணை நேசித்தானோ அதே மண்ணில் அவன் கதை முடிகின்றது. ஆனால் அவன் மண்மேல் வாழ்ந்த நாட்கள் இன்பகரமானவை. இதுதான் மண்ணின் மகிமை. அவன் இறந்துபட்டது பெரிதல்ல. அவன் மண்ணில் எப்படி வாழ்ந்தான் என்பதுதான் கேள்வி? அவன் மண்ணுடன் இணைந்து மாண்புடன் வாழ்ந்தான் என்பதுதான் அதன் விடை.

அவன் இரவில் மண்மேல் படுத்து உறங்கினான். வயலில் வேலை செய்து களைப்புறும் பொழுதும் அருகிலுள்ள மரநிழலில் வெண் மணல்மேல் படுத்துத் தூங்கினான். அவனை மண்ணின் ஈர்ப்புச்சக்தி நோய் நொடி வராது காப்பாற்றியது. நாமும் அவ்வண்ணம் மண்ணோடு சேர்ந்து அவர் வழி நின்று, அற வழி நாடிப் பெருவாழ்வு காண்போம்.

# கடுகு போகும் இடம்

கோடைகாலம் வந்துவிட்டால் இலண்டனில் கோயில்களிலே தேர்த் திருவிழாக்கள் நடைபெறும். ஒவ்வொரு ஞாயிறும் ஏதாவது ஒரு கோயிலிலே தேர்த்திருவிழா இருக்கும். அந்தந்தக் கோயிலுக்குக் கிட்ட உள்ளவர்கள்பாடு கொண்டாட்டந்தான். ஏனெனில் திருவிழா நடைபெறும் பத்தோ, பதினைந்தோ நாள்களுக்கு வீட்டிலே சமையல் எதுவும் செய்யவேண்டிய அவசியம் இல்லை. கோயிலுக்குப் போனால், இடியப்பம், இட்லி, உப்புமா என விதம்விதமான உணவுவகை பரிமாறப்படும். மாமிசம் இல்லாமற் சாப்பிட முடியாதவர்கள் கோயிலிலே கொடுக்கும் உணவை ஒரு தட்டிலே எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போய் வீட்டில் உள்ளவற்றோடு சாப்பிடலாம். வரிசையிலே பின்னால் எத்தனைபேர் நிற்கிறார்கள், அவர்களுக்கு இல்லாமல் நாமே எடுத்துப்போவது சரியா? என்றெல்லாம் நினைக்கத் தேவையில்லை. அல்லது சாப்பிட முடியாத அளவுக்கு நிறைய வாங்கிவிட்டு மீதியைக் குப்பைத்தொட்டியிலே போடலாம்.

திருவிழாவிலே வீதியுலா வரும்போது, சில கோயில்களிலே சில சட்டங்கள் உண்டு. சுவாமியைத் தோளிலே சுமப்பவர்கள் வேட்டி கட்டவேண்டும் என்பது அவற்றில் ஒன்று. இவர்களிலே பலர் கோயிலுக்கு வரும்பொழுது காற்சட்டையுடன்தான் வருவார்கள், காற்சட்டையுடன்தான் நின்று வழிபடுவார்கள். வீதியுலா ஆரம்பிக்குமுன் வரிசையாகப்போய் ஓர் அறையிலேயிருந்து வேட்டி அணிந்தபடி வருவார்கள். வேடிக்கை என்னவென்றால், வேட்டிக்கு நடுவே இடையிடை அவர்களின் காற்சட்டை எட்டிப்பார்த்துப் புன்னகைக்கும். அந்த வேட்டியும் ஒவ்வொருநாளும் மடித்துவைத்துக் கட்டும் அதே வேட்டிதான். பத்துநாளும் தண்ணீர் காணாது தாகமாக இருக்கும் வேட்டி அது!

வசதியான ஊரிலே வாழ்வதால், கோயிலுக்கு வருவோரில் பெரும்பாலானவர்கள் வாகனங்களிலேயே வருகிறார்கள். அவற்றைத் தள்ளி நிறுத்துவது அவர்களுக்குப் பிடிக்காது. ஏனெனில் அவர்கள் பிறக்கும்போதே காரோடுதான் பிறந்தவர்கள். அவர்களால் நடக்க முடியாது. மற்றவர்கள், கோயிலுக்கு வராதவர்கள், கோயிலுக்கு அண்மையில் வசிப்பவர்கள் அந்தத் தெருவைப் பயன்படுத்துவார்களே, அவர்களுக்கு இடையூறு விளைக்கலாமா? என்ற சிந்தனை அவர்களுக்கு எள்ளளவும் இல்லை. ஓரமாக நிறுத்தாது, இடம் இருந்தாலும், நடுத்தெருவிலே நிறுத்தி தம்மோடு வந்த பயணிகளை இறக்குவதும் இவர்களுக்குப் பிடித்த பொழுதுபோக்கு. போக்குவரவைத் தாமதப்படுத்துவதில் அவர்களுக்கு அத்தனை மகிழ்ச்சி.

கோயிலுக்குள்ளே அபிழி~கம், விசேட அர்ச்சனை நடக்கும்போது அவற்றை நின்று தரிசிக்கக் கூடாது. கோயிலை வலம்வரவேண்டும். அப்போதுதான் அந்த விசேட நிகழ்வுகளைத் தரிசிப்பவர்களுக்கு இடையூறு விளைக்கலாம். தாங்களும் தரிசிக்காது, மற்றவர்களையும் தரிசிக்கவிடாது செய்வது எத்தனை உன்னதமான ஒரு பணி! கூட்டுப்பிரார்த்தனையும் இப்போது பஜனையாக மாறிவிட்டது. திருமுறைகள் ஓதுவதில்லை. பத்திப் பாடல்கள் என்ற பெயரிலே பல பாடல்கள் பாடப்படுகின்றன. ஒரு கோயிலிலே, துக்கநிவாரணி என்ற பாடலைத் 'தூக்க நிவாரணி காமாட்சி' என்று பாடினார்கள்.

கடவுளை எப்படி வழிபடவேண்டும், எப்போ ஆலயத்தை வலம் வரலாம், எப்படிக் கோயிலுக்குப் போகவேண்டும், கோயிலிலே செய்யத்தக்கவை எவை, தகாதவை எவை என்றெல்லாம் விதிமுறைகள் உள. அவற்றைத் தெரிந்துகொள்ள நாம் முயல்வதில்லை. தெரிந்தவர்கள் சொன்னாற் கேட்பதுமில்லை. சிவாசாரியர்களை நம் ஊதியத்துக்கு உழைக்கும் ஊழியர்போல நடத்துகிறோம். நம் சமயத்திலுள்ள சிறப்புக்களை அறியாது, பிற மதங்களை உதாரணம் காட்டி நம் சமயத்தை இழிவுபடுத்துகிறோம். ஆனாற் பிறமதகுருவுக்கு பிறமதத்தவர் கொடுக்கும் மதிப்பு மரியாதையில் நூறில் ஒருபங்குகூட நம் மதகுருமாருக்கு நாம் கொடுப்பதில்லை. இத்தனைக்கும் பிறமதகுருமார்கள் அப்படி ஒன்றும் அளவுக்கதிகமாக உயர்ந்தவர்கள் என்று சொல்லமுடியாது.

தமிழிலே ஒரு பழமொழி உண்டு. 'மிளகு போகுமிடம் தெரியாது, கடுகு போகுமிடம் பார்க்கிறார்கள்' என்பதுதான் அது. பெரிய, முக்கிய பிழைகளை நாம் கண்டுகொள்வதில்லை. சிறு சிறு பிழைகளை, முக்கியமற்றவற்றை பெரிதுபடுத்திப் பார்ப்பது நமக்குப் பழக்கமாகிவிட்டது. கோயில்களிலே முக்கிமாகச் செய்யவேண்டியவற்றை நாம் பார்ப்பதில்லை. சரியாகச் செய்ய முயல்வதுமில்லை. கோயிலுக்குப் போகும்போது குளித்து, தோய்த்துலர்ந்த ஆடை தரித்துப் போகவேண்டும், வேட்டிதான் கட்டவேண்டும் என்பதல்ல. பிரசாதமாகக் கொடுப்பதைப் பிரசாதமாக அளவாக எடுத்து இறைசிந்தனையோடு உண்ணவேண்டுமே தவிர, இன்றைக்கும் இடியப்பமா? என்று கேட்பதல்ல. வழிபடும்பொழுதும் கோயிலுக்கு வரும்பொழுதும் மற்றவர்களுக்கு இடையூறு விளைக்காமல் இருக்கவேண்டுமே தவிர மற்றவர்களின் வெறுப்பை வெளிப்படு;த்துவதல்ல. இப்படி நிறைய மிளகுகள் இருக்கும்போது நாம் மிளகு போகும் இடத்தைமட்டும் பார்ப்போம், கடுகு போகுமிடத்தை விடுவோமா?

## தகவல்

21 வருடங்களுக்கு முன் சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியை "கானக்குயில்" என்ற பெயரில் லண்டனில் உருவாக்கி இன்று வரை வெற்றிகரமாக நடத்தி வருபவர் யோகா தில்லைநாதன் அவர்கள் இது நமக்கு பெருமை சேர்க்கும் விடயமாகும்.

கடந்த 21 வருடங்களாக ஒவ்வொரு வருடமும் ஆண், பெண் என இருபாலரிலும் தேர்ந்தெடுத்து "சூப்பர் சிங்கர்"களை உருவாக்கி வருகிறார் இந்த சூப்பர் சிங்கங்கள் 44 பேரையும் மேடையில் ஏற்றி பாட வைத்தால் விஜய் சூப்பர் சிங்கர்" போல் தரமான நிகழ்ச்சியாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. இப்படி இருக்கும் போது விஜய் சூப்பர் சிங்கர்களை லட்சம், லட்சமாக கொட்டிக் கொடுத்து இங்கு பாட வைப்பதில் என்ன இருக்கிறது. நம் பிள்ளைகளும், பாடி சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியில் பாடினார்கள், பாடி வருகிறார்கள். ஆகையால் நம்மவர்களை ஊக்கப்படுத்தி, கௌரவித்தால் அது மிகவும் நல்லது.

*****

## நல்ல நேரம் எது

சென்றவாரம் உயர் வாசல் குன்று முருகன் கோயில் கொடியேற்ற விழாவுக்கு செல்லும் வாய்ப்பு கிடைத்தது. கோயில் கொடியேற்ற விழா பகல் 12 மணிக்கு நடைபெறவில்லை என பல பக்தர்கள் பேசிக் கொண்டு நின்றார்கள்.

பகல் 12 மணிக்கு கொடியேற்றம் நடைபெறவில்லை என்பது பெரிய குற்றமாக பக்தர்களுக்கு தெரிகிறது. எந்தநாளும் திதியும் இல்லாமல் ஞாயிறு அன்று தேர் ஓடுகிறது இது எந்த வகையில் சரியாக இருக்கும்

ஞாயிறு அன்று தேர் ஓடும் கோயில்களில் எந்த நேரத்தில் கொடியேற்றினால் என்ன?

*****

# அய்யன் திருவள்ளுவர் தமிழ் மன்றம்

## வழங்கும்

## மாதம் இரண்டு திருக்குறள்

அன்புஈனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு.

அன்பு பிறரிடம் பற்றுள்ளம்
கொள்ளச் செய்யும் அந்த உள்ளம்,
நட்பு எனும் பெருஞ்சிறப்பை
உருவாக்கும்.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை.

வீரச் செயல்களுக்கும்
அன்பு துணையாகத் திகழ்கிறது
என்பதை அறியாதவர்களே,
அறச் செயல்களுக்கு மட்டுமே
அன்பு துணையாக இருப்பதாகக் கூறுவார்கள்.




இந்தத் திருக்குறள் நூலை லண்டனில் பெற
தமிழர் தகவல் இதழைத் தொடர்புக்கொள்ளுங்கள்

**விலை. 2 பவுண்ட் மட்டும்**


Athavan TV
24 Hour Tamil Channel
Drama | Movies | Music | News | Sports | Live Events | Religion | Life Style
Free Channel
Satellite: (Eurobird 9a)
Freq: 11843
Vertical Symbol Rate: 27500
FEC – ¾
நம்ம நட்சத்திரங்களின் அணிவகுப்பு
Monday to Friday 8.30 PM
Sunday 9.00 PM
மேளம் கொட்டு தாலி கட்டு
Saturday 8.00 PM
Monday to Friday 6.00 PM
Monday to Friday 8.00 PM
மல்லி
Monday to Friday 6.30 PM
Latest Movies
Daily 2.00 PM
Sunday 11.00 AM
லட்டு ஆசையா
Monday to Friday 5.00 PM
NEWS UPDATE
BREAKING NEWS
News That's Making News!
8AM 1PM 7PM
விளம்பர தொடர்புகளுக்கு
UNITED KINGDOM 0203 318 2004
FRANCE 097 518 0123
ITALY 0247 921 666
GERMANY 0305 6837 0039
SWITZERLAND 0435 082 375
SWEDAN 085 250 0208
WWW.ATHAVAN.TV

இலண்டனில் தரமான தங்கத்திற்கு

PATHMINI
JEWELLERS
22ct GOLD

892 London Road
Thornton Heath
Surrey CR7 7PB
Tel : 020 8665 1111
Fax : 020 8664 8999





லூசியத்தில் முதலாவது
தமிழ்க்கடை

கற்பகம்

தங்கள் சேவையை
விரிவாக்கியுள்ளார்கள்

KATPAGAM

36, Loampit Hill Lewisham
London SE 13 7SW
Tel : 694 88 10

உடன் காய்கறிகள்
பழவகைகள், இறைச்சி,
தமிழ் ஆடியோ, வீடியோ
தமிழ்படங்கள் அனைத்தும்
ஒரே இடத்தில்





எவரஸ்ட்

24 Loampit Hill
Lewisham SE13 7SW
Tel : 020 8691 2233

அசத்தலான
அசைவ சுவைக்கு






Breakfast Lunch Dinner



Anthoorium
World of Designs
Jewellery & Textiles


102, B Burlington Road
New Malden, Surrey KT3 4NT
Tel : 020 8942 8001 Fax : 020 8942 8007
Web : www.anthoorium.co.uk Email : sales@anthoorium.co.uk

# Thinesh

Jewellers & Textiles

276, Lewisham High Street
Lewisham
London SE 13, 6JZ
Tel : 020 8613 9569
www.thinesh-jt.com



லூசியத்தில்
தரமான
நகைக்கடை



Book typing and layout
*(English and Tamil)*
Book & Wrapper Design
Brochure Design
and Printing
Contact
ambika.siva5@gmail.com

அழைப்பிதழ்கள், நூல்கள், இதழ்கள்
வடிவமைக்க...
சிறந்த முறையில்
அச்சிட....
தொடர்பு கொள்ளுங்கள்
ambika.siva5@gmail.com




# ஆன்மீக யாத்திரை

ஆன்மீக சுற்றுலா
ஆறு பகல், ஐந்து இரவு
காசி, திரிவேணி சங்கமம், அயோத்யா, கயா
கட்டணம் ஒரு நபர்க்கு £ 950
தங்கும் இடம், உணவு,
Airport pickup and drop, Local transport உட்பட

## பாரத்வாஜ் டூர்ஸ் & டிராவல்ஸ்

B 5/270 ஹனுமான் காட்
வாரனாசி - 221 001
Tel : (0542) 227 6932
Mob : 095546 66612 / 094530 02020
Email : kasimani24@gmail.com

லண்டன் தொடர்புகளுக்கு தமிழர் தகவல்






Hotel Westeern
Hotel Westeern (Pvt) Ltd
35, Frankfurt Place
Bambalapitiya
Colombo 4, Sri Lanka
Email : infor@hotelwesteern .com
Web : www.hotelwesteern.com
Approved by the Ceylon Tourist Board
EELAM SHOP
399 Lewisham High Street
Lewisham
London SE13 6NZ
TeL : 020 8690 6545




Chennai Spice
Restaurant and Banqueting
Restaurant and Banqueting is open
7 days a week
Chennai Spice offers
authentic Srilankan &
South Indian cuisine
London's premier
Outdoor Caterers for
Srilankan & South Indian food.
We cater for a variety of events
such as Weddings, Engagements,
Arangetrams, Birthday parties,
conference to name a few.
Free
Home Delivery.
Chennai Spice Restaurant and Banqueting
213-217 Hertford Road, London, N9 7ER
Tel : 020 8805 9944, 020 8805 8215, Mob : 07932 059 553
email : info@chennaispice.com




ஆடை ஆபரணம் வாங்க ஆசை பூர்த்தியாக
நீங்கள் என்றும் நாடவேண்டிய ஒரே இடம்
Jk Gold House &
Fashion House
314 - 316 London Road
Croydon, Surrey CRO 2TJ
Tel : 020 8684 4577
Fax : 022 8684 4677
புதன் கிழமை
விடுமுறை

செல்வராஜா
கோடைகால விடுமுறையை முன்னிட்டு புடவைகள் நகைகள்
அனைத்தும் நம்ப முடியாத விலைக்கழிவில்
£200 பெறுமதியான Gift Voucher
இலவசம்
£100 பெறுமதியான Gift Voucher
FREE
புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள
சீட்டுத் திட்டத்தில் இணைந்து
நீங்களும் ஒரு அதிஸ்டசாலி
ஆகுங்கள்.
Selvaraja Gold House & Textile
Exclusive Designer Jewellery & Sarees
162b, Mitcham Road London SW17 9NJ
Tel : 020 8767 3795 | 07825 005 269



AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
FOR CONTACT : 0140360612 - 0142095515
0603774714 - 0141699425, 0699575151
18TH JULY
RELEASE
DHANUSH & AMALAPAUL in
Velaiyilla
Pattathari
DIRECTION : R.VELRAJ MUSIC : ANIRUDH
STARRING : DHANUSH, AMALA PAUL, SAMUTHIRAKANI, SARANYA PONVANNAN, VIVEK, SATHISH AND OTHERS
FROM FRI 18TH JULY - CINEWORLD CINEMAS
ADVANCE BOOKING : http://www.cineworld.co.uk OR CALL - 0871 220 1000
FROM FRI 18TH HARROW SAFARI
ADVANCE BOOKING ONLINE - HTTP://SAFARICINEMA.COM/
OR CALL - 0208 426 03 03
FOR FURTHER DETAILS : 020 8540 1500, 020 8903 3300. SUBJECTED TO CHANGES IN SHOW TIMES WITHIN ADVERTISE PERIOD.
JOIN US ON
YouTube www.youtube.com/ayngaran
www.facebook.com/ayngaran
visit us: www.ayngaran.com

**LIME PICKLE/ MANGO PICKLE**




# 99 p

On Your Way
Best Foods
Est. 1989
SUPERMARKET


panagal park chennai
brooke bond rd coimbatore
vannarpettai tirunelveli
toll free no 1800 425 3105
(applicable within India only from 10am to 9pm)
sms Bridal7 to 53636
email silks@rmkv.com
www.facebook.com/RmkvSilks
online at www.rmkv.com
traditions made trendy
RmKV
Wedding Silks
jadau silk
colourful inlay
to know more about our new diwali collection sms RmKV to 53636
Now in
Bangaluru
Orion Mall
brigade gateway campus
Dr. Rajkumar rd
malleswaran-rajaji nagar
bengaluru





# இலண்டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்


5 Chapel Road, West Ealing, London W13 9AE

தொலைபேசி இல.: 0208 810 0835 தொலைநகல்: 0208 840 0485 / Email: info@ammanealing.org web: www.ammanealing.org


## மகோற்சவ விஞ்ஞாபனம் 2014

அம்பிகை அடியார்களே,

சொல்லும் பொருளும் என, நடமாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே. நின் புதுமலர்த் தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும், சிவலோகமும் சித்திக்குமே. – அபிராமி அந்தாதி

இலண்டன் மாநகரில் ஈலிங் பதியில் கோவில் கொண்டு அகிலமெல்லாம் அருளாட்சி செய்யும் அன்னை ஸ்ரீ கனகதுர்க்கை அம்மனின் வருடாந்த மகோற்சவ விழா மங்களகரமான ஜய வருடம் ஆடி மாதம் 01ம் நாள் மாலை கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து, 02ம் நாள் வெள்ளிக்கிழமை 18-07-2014 கொடியேற்றமும், 10-08-2014 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 11-08-2014 திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 13-08-2014 இரவு வைரவர் மடையுடன் நிறைவுற திருவருள் கூடியுள்ளது. அக்காலங்களில் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக வருகை தந்து கிரியைகளில் பங்குகொண்டு, தொண்டுகள் புரிந்து அம்பிகையின் அருள் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

### 18-07-2014 முதல் 09-08-2014 வரை பூசை நேரம்

| | |
|---|---|
| காலை 8:15 சங்கல்பம் | மாலை 5:15 சாயரட்சைப் பூசை |
| காலை 8:30 அபிஷேகம் | மாலை 5:45 ஸ்தம்ப பூசை |
| காலை 10:40 ஸ்தம்ப பூசை | மாலை 6:30 கலாசார நிகழ்வு |
| காலை 11:30 வசந்தமண்டப பூசை | இரவு 7:15 வசந்தமண்டபப் பூசை |
| பகல் 1:00 மகா பிரசாதம் | இரவு 10:30 விழா நிறைவு |

### மகோற்சவ நிகழ்வுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 18/07/2014 | வெள்ளி | கொடியேற்றக் காட்சி காலை 9.30 மணி | 01/08/2014 | வெள்ளி | கேதார கௌரி அம்பாள் அருட்காட்சி |
| 19/07/2014 | சனி | ராஜ ராஜேஸ்வரி அருட்காட்சி | 02/08/2014 | சனி | வசந்தோற்சவ அருட்காட்சி |
| 20/07/2014 | ஞாயிறு | கனகதாரா லட்சுமி அருட்காட்சி | 03/08/2014 | ஞாயிறு | பக்தானுக்கிரக அருட்காட்சி |
| 21/07/2014 | திங்கள் | நாகபூசனி அருட்காட்சி | 04/08/2014 | திங்கள் | சந்தானபாக்கிய லட்சுமி அருட்காட்சி (தங்கரதப் பவனி) |
| 22/07/2014 | செவ்வாய் | மீனாட்சி அம்பாள் அருட்காட்சி | 05/08/2014 | செவ்வாய் | ஜோதி மங்கள அருட்காட்சி |
| 23/07/2014 | புதன் | சரஸ்வதி வித்யா அருட்காட்சி | 06/08/2014 | புதன் | ஓம்காரரூப தர்சன அருட்காட்சி |
| 24/07/2014 | வியாழன் | அர்த்தநாரீஸ்வர அருட்காட்சி | 07/08/2014 | வியாழன் | மகாதுர்க்கா தரிசன அருட்காட்சி |
| 25/07/2014 | வெள்ளி | கைலாச தரிசன அருட்காட்சி | 08/08/2014 | வெள்ளி | வேட்டைத் திருவிழா |
| 26/07/2014 | சனி | அன்ன பூரணாம்பிகை அருட்காட்சி | 09/08/2014 | சனி | சகோபு தர்சன அருட்காட்சி (சப்பரம்) |
| 27/07/2014 | ஞாயிறு | அபிராமி தரிசன அருட்காட்சி | 10/08/2014 | ஞாயிறு | இரதோற்சவம் (தேர்) காலை 10.00 மணி |
| 28/07/2014 | திங்கள் | சௌபாக்கியாம்பிகை அருட்காட்சி | 11/08/2014 | திங்கள் | தீர்த்தவாரி அருட்காட்சி |
| 29/07/2014 | செவ்வாய் | காமாட்சி அருட்காட்சி | 12/08/2014 | செவ்வாய் | பூங்காவன அருட்காட்சி |
| 30/07/2014 | புதன் | அனந்த சயன அருட்காட்சி | 13/08/2014 | புதன் | வைரவர் மடை |
| 31/07/2014 | வியாழன் | புஸ்பக விமான அருட்காட்சி | | | |

பூசைக்குரிய பூக்கள், பால், இளநீர் போன்றவற்றை அபிசேகத்திற்கு முன்னதாக
ஆலயத்தில் கொடுத்து உதவுக.
அனைவரும் வருக. அன்னையின் அருள் பெறுக.
அன்னையின் சேவையில்
விழா உபயகாரர்களுடன், அறங்காவலர்கள்.
"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"


4G
NOW AVAILABLE
Lycamobile
Call the world for less
Special rates with UK plan
Sri Lanka
3p /min
Landline + Mobile
500 UK Minutes
+
Unlimited Data
Unlimited UK texts
Unlimited calls and texts from
Lycamobile to Lycamobile
£15
/30 days
To buy:
Text 11244 to 3536
Order your free SIM at www.lycamobile.co.uk or call 020 7132 0322
Top-up your SIM online or where you see the following signs:
TESCO
Sainsbury's
WHSmith
Lyca mobile